பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 21 ஞாயிற்றுக்கிழமை 04.05.2025 கதிர் 176

## இனி இது ரகசியம் அல்ல!

நாட்டிலேயே சுவரொட்டிப் பரப்புரையில் பேர் போனது ஜேவிபி. இப்போது என்பிபி. எத்தனுக்கு எத்தன் வையகத்தில் உண்டு என்பதை நிரூபித்து அந்த ஜேவிபிக்கே ☞ 2

# தேசியத் தலைவருக்கு சிலை வைப்பீர்களா? கேள்விக்கு பதில் தராமல் நழுவிய அமைச்சர்

தேசியத்தலைவர் பிரபாகரனுக்கு சிலை வைக்குமா தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு என்ற கேள்விக்கு பதிலளிக்காமல் நழுவினார் மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன். "இதுவரை சொல்லப்பட்ட விடங்களை எல்லாம் கடைசியில் ஒரு சின்ன விடயத்தில் போட்டு மறைத்துவிடாதீர்கள்" என்று பதிலளித்தார் அமைச்சர்.

முன்னதாக, "வல்வெட்டித்துறையில் தமிழீழ தேசிய தலைவருக்கு வெண்கல சிலை வைப்போம், இறங்குதுறைக்கு தேசிய தலைவரின் பெற்றோரின் பெயர் வைப்போம் என கடற்தொழில் அமைச்சர் உறுதி அளிப்பாரா?" என்று வல்வெட்டித்துறை நகர சபை வேட்பாளர் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியிருந்தார்.

"தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு தேர்தல் பிரச்சார பாடல் ஒன்றில் , தேசிய தலைவருக்கு சிலை வைப்போம், இறங்குதுறைக்கு தேசிய தலைவரின் பெற்றோரின் பெயர்களை பதிப்போம் என குறிப்பிட்டுள்ளார்கள். குறித்த பாடல் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ள நிலையில், பாடலில் குறிப்பிட்டுள்ளது போன்று, செய்வார்கள் எனில் , அதனை கடற்தொழில் அமைச்சர் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தட்டும். அதனை விடுத்து, மக்களை குழப்பும் செயலில் ஈடுபட வேண்டாம்" என்று சிவாஜிலிங்கம் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் அமைச்சரிடம் நேற்றுக் கேள்வி எழுப்பியிருந்தனர். அந்தப் பாடலைத்தான் கேட்கவேயில்லை என்று முதலில் மறுத்தார் அமைச்சர். உடனடியாக தமது திறன் பேசியில் அந்தப் பாடலை அவருக்குக் காண்பித்தனர் செய்தியாளர்கள். அதனை இடைநடுவிலேயே நிறுத்திய ☞ 8

# ரவுடி அமைச்சர் சந்திரசேகரனுக்கு தெரியாது அவரது கட்சிக்கும் நானே சட்டத்தரணி என்று

## கடைசிப் பரப்புரைக் கூட்டத்தில் சாட்டையைச் சுழற்றிய சுமந்திரன்



ரவுடி அமைச்சருக்குத் தெரியாது அவருடைய கட்சி இதுவரைக்கும் ஊழலுக்கு எதிராகத் தாக்கல் செய்த அனைத்து வழக்குகளிலும் என்னைத்தான் சட்டத்தரணியாக நியதித்திருக்கின்றார்கள் என்பது. அவரது கட்சித் தலைவர்களிடம் போய் ஊழலுக்குஎதிரான வழக்குகளில் ஏன் சுமந்திரனைச் சட்டத்தரணியாக ☞ 2



# கட்டாமலேயே 97 பாலங்களுக்கு ரூ. 330 மில்லியன் கொடுப்பனவு

## கணக்குத் தணிக்கை அலுவலகம் அறிக்கை

தேசிய கணக்குத் தணிக்கை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டில் ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்ட 97 பாலங்களின் கட்டுமான ஒப்பந்தக்காரர்களுக்கு ரூ.330 மில்லியனுக்கும் அதிகமான தொகை செலுத்தப்பட்டது.

தற்போது நடைபெற்று வரும் 111 கிராமப்புற கட்டுமானத் திட்டங்களில் அறுபது பாலங்களின் முன்னேற்றம் ஐம்பது சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது என்றும் அறிக்கை கூறுகிறது.

☞ 8

# அரிசிச் சாக்கில் சுற்றப்பட்டு வீசப்பட்ட பெண்ணின் சடலம்

## நுரைச்சோலைக் கரையோரம் கொடூரம்

நுரைச்சோலை காவல் படைப் பிரிவுக்குட்பட்ட தளுவதம்பபன்னி கடற்படைத் தளத்திற்கு அருகிலுள்ள கடற்கரையில் இன்று (3) அரிசிச் சாக்கில் சுற்றப்பட்ட நிலையில் ஒரு பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

அரிசிச் சாக்கில் சுற்றப்பட்டிருந்த உடலின் கீழ் பகுதி மட்டுமே கண்டெடுக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அடையாளம் தெரியாத சடலம் கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்டு துணியால் சுற்றப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது. பொலிஸார் தலையைத் தேடி வருகின்றனர்.

சம்பவம் குறித்து நுரைரோச்சோலை காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாமே ஆளும்கட்சி; மறக்கக்கூடாது நிறைவேற்று அதிகாரமும் உண்டு

## அதிகாரத் தொனியில் அமைச்சர் சந்திரசேகரன் நேற்று எச்சரிக்கை

நாங்களே ஆளுங்கட்சி; மறந்துவிடக்கூடாது. 159 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட பெரும்பான்மை ஆளும்தரப்பு. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் எம்மிடம் உள்ளார். யாழ். மாநகர சபை முதன்மை வேட்பாளர் கபிலனோடு விளையாடுவது ஆளும்தரப்போடு விளையாடுவதற்குச் சமம் என்று நேற்றும் பெரும் அதிகாரத் தொணியோடும் எச்சரிக்கைப் பாணியிலும் தெரிவித்தார் மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன்.

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது



இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் பரப்புரையில் யாழ்ப்பாணம் மக்கள் எமக்கு அமோகமான ஆதரவைத் தந்தார்கள். கடந்த தேர்தலைவிட பெரும் வெற்றி இம்முறை கிடைக்கும்.

எமது அரசின் செயற்பாடுகளைப் பார்த்து தமிழ்க் கட்சிகள் புலம்பி தற்போது ஊளையிடுகின்றார்கள். நாங்கள் வேகமாக யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்புகின்றோம். தமிழ் மக்களுடைய தன்மானத்தைத் தேசிய மக்கள் சக்தி அரசின் கீழேயே கட்டிக்காக்க முடியும்.

☞ 8

### 2022 மே கலவரத்தில் தீக்கிரையான வீடுகளுக்காக

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் ரூ. 620 மில். இழப்பீடு பெற்றனர்

2022 மக்கள் எழுச்சியின்போது, மே 9 நடந்த கலவரத்தினால் தீ வைக்கப்பட்ட தமது வீடுகளுக்காக பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள் 92 போர் திறைசேரியிடமிருந்து ரூ. ☞ 8

# எலான் மஸ்க்கின் ஸ்டார் லிங்கின் ஒப்பந்தம்: தேசிய பாதுகாப்பு கவலையை எழுப்பும் அநுர

இலங்கையில் தற்போதுள்ள தொலைத்தொடர்பு வழங்குநர்களைப் போலல்லாமல், முக்கியமான தரவுகளை அணுக ஆளும்தரப்புக்குள்ள இயலாமையைக் காரணம் காட்டி, அமெரிக்கத் தொழிலதிபர் எலான் மஸ்கின் ஸ்டார்லிங்குடனான ஒப்பந்தம் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேசிய பாதுகாப்பு கவலைகளை எழுப்பியுள்ளார்.

இலங்கையில் ஏப்ரலில் தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்த ஸ்டார்லிங்க் ☞ 8

# சபாநாயகர்களின் வாகனங்களை 2ஆகக் குறைப்பதற்குத் தீர்மானம்

## எரிபொருள் பயன்பாட்டுக்கும் மட்டுப்பாடுகள்

சபாநாயகர், துணை சபாநாயகர், துணைக் குழுத் தலைவர் ஆகியோருக்கு வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை இரண்டாகக் குறைக்கவும், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், துணைச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம் மற்றும் நாடாளுமன்றத் துறைத் தலைவர்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவைக் கணிசமாகக் குறைக்கவும் நாடாளுமன்றப் பணியாளர் ஆலோசனைக் குழு முடிவு செய்துள்ளது.

இதுவரை, நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு வரம்பற்ற எரிபொருள் வழங்கப்பட்டு வந்ததாகவும், இனிமேல், அமைச்சின் செயலாளருக்குச் சமமான அளவு எரிபொருளைப் பெற மட்டுமே செயலாளர் நாயகத்திற்கும் உரிமை உண்டு என்றும் நாடாளுமன்ற ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சுவரொட்டி மூலம் ஆப்படித்திருக்கின்றது யாழ்ப்பாணத்துச் சமூகம். இதை அப்படிச் சொல்லலாமா என்று தெரியவில்லை,




அதனால் யாழ்ப்பாணத்து அநாமதேயச் சமூகம் என்று சொல்லி வைப்போம்.

ஏற்கனவே ஒரு சுவரொட்டி கறுப்பு வெள்ளையில் யாழ்ப்பாண வாக்களர்களே மூன்று கோமாளிகளும் ஒரு பைத்தியமும் போதும் என்ற கோரிக்கையுடன் யாழ். கல்விச் சமூகம் என்ற பெயரில் ஒட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சுவரொட்டிகளை தேர்தல் சுவரொட்டிகள் வரிசையில் சேர்த்து, அவற்றைக் கிழிப்பதா அகற்றுவதா என்கிற குழப்பத்தில் அவை அப்படியே கறுப்பு வெள்ளையில் முழித்துக்கொண்டு கிடக்கின்றன. அதன் அருகிலேயே ஒட்டப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டிகள் எல்லாம் கிழிக்கப்பட்டாலும் இந்தச் சுவரொட்டிகள் கிழிக்கப்படவில்லை. வடிவேல் சொன்னதைப் போன்று "அவரே கென்பியூஸ் ஆகிட்டாரு" மொமன்டில் தேர்தல் திணைக்களத்தினர் இருப்பதால் இந்தச் சுவரொட்டிகளை எப்படி, எந்தக் காரணத்தை முன்வைத்து அகற்றுவது என்று யோசித்துக் கொண்டிருப்பார்கள் போலும்.

இந்த அக்கப்போரே முடியாமலிருக்க நேற்றிரவு மற்றொரு ஜித்து வேலையும் இடம்பெற்றிருக்கிறது. இந்தமுறை கறுப்பு வெள்ளையில் இல்லை வர்ணத்தில் சுவரொட்டிகள், அதுவும் என்பிபியின் தலைவர் அநுரவின் சுவரொட்டிக்கு அ-ருகிலேயே ஒட்டப்பட்டிருக்கின்றது. அதில் தேரர் ஒருவர் முன்னிலையில் (அவர் மாகாநயக்கர்களில் ஒருவராக இருக்கவேண்டும்) முழந்தாளிட்டு நின்றவாறு ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, பயபக்தியோடு ஒரு ஓலைச் சுரளை அல்லது துணிச் சுருளைக் கையளிக்கிறார். தேரர் உயரத்தில், ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவரின் முன்பாக ஜனாதிபதி மண்டியிட்டிருக்கிறார். அதன் கிழே பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல்வேண்டும் - என்பிபி ஆதரணி அணி என்று எழுதப்பட்டுள்ளது.

அந்தப் படமும் அந்த வசனங்களும் எதை உணர்த்த விரும்புகின்றன என்பதை யாழ்ப்பாணத்திலோ வடக்கு கிழக்கிலோ உள்ள தமிழர்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டியதில்லை. என்பிபி இப்போது வாய் கிழியப் பேசும் இன, மத சமத்துவத்திற்கு இந்தப் படமே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தேரரின் முன்னால் மண்டியிட்டிருக்கும் ஜனாதிபதி வேறு எந்தவொரு மதத் தலைவரின் முன்பாகவும் இவ்வாறு மண்டியிட்டிருக்கக்கூடிய ஒரு படத்தை மருந்துக்கும் காணமுடியாது. வேறு எந்த மதத் தலைவர்களும் ஜனாதிபதியைத் தம்முன் மண்ணியிட வைக்கும் துணிபும், விருப்பமும் கொண்டவர்களல்லர், அல்லது அப்படி மண்டியிட அனுமதிப்பதன் மூலம் தமது மத ஆதிக்கத்தை நிலைநிறுத்த விரும்புபவர்களும் அல்லர்.

அதுவேறு விடயம், சுவரொட்டியில் காணப்படும் வாசகம் அரசமைப்பில் காணப்படுபவை. இப்போது இந்தச் சுவரொட்டியை எந்த வகைக்குள் சேர்ப்பது? இதனையும் தேர்தல் சுவரொட்டி என்று அகற்றுவதா? அல்லது இது தேர்தல் சுவரொட்டி அல்ல என்று அகற்றாமல் விடுவதா? கோமாளிகள் பைத்தியம் சுவரொட்டியையே அகற்றுவதா விடுவதா என்பதில் அதிகாரிகள் இன்னும் ஒரு முடிவுக்கு வராத நிலையில் இந்தச் சுவரொட்டியை என்ன செய்வார்கள் அதிகாரிகள்?

சுவரொட்டிப் போராளிகளுக்கே சுவரொட்டி மூலம் பதிலடி கொடுத்து, உங்களுக்கு முன்னமே நாங்கள் இதில் கேடிகள் என்று நிரூபித்திருக்கிறார். 1980களின் பிற்பகுதியிலும் 1990களின் முற்பகுதியிலும் இயக்கங்கள் பிரபலமாகத் தொடங்கிய காலத்திலேயே இத்தகைய சுவரொட்டிகளில் தமிழர் தரப்பு பழம் தின்று கொட்டை போட்டிருக்கின்றது. தொடக்கத்தில் இப்படிச் சுவரொட்டிகள் ஒட்டித் திரிந்தவர்கள்தான் பின்னர் இயக்கங்களில் முக்கிய பொறுப்புக்களில் இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட எங்களுக்கேவா? என்கிற வகையில் முறைக்கின்றன இந்த கறுப்பு வெள்ளை மற்றும் சிவப்பு வெள்ளைச் சுவரொட்டிகள்.

அங்க வச்சுக்க, இங்க வச்சுக்க ஆனால் யாழ்ப்பாணத்தானிடம் மட்டும் வச்சுக்காத என்று சொல்வதைப் போலுள்ளது இந்தச் சுவரொட்டிகள். தேர்தல் பரப்புரை சுவாரஸியமோ இல்லையோ இந்தச் சுவரொட்டிச் சண்டைகள் தேர்தல் மீதான ஆர்வத்தைத் தூண்டுகின்றன என்று சொன்னால் மிகையில்லை.

இதற்கிடையில் தமிழ்க் கட்சிகளின் சுவரொட்டிகள் சில சிரிப்பையும் வரவழைக்கத் தவறவில்லை. தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சுவரொட்டி ஒன்றில் சட்டப் போராட்டத்தில் வென்ற கட்சி என்று போட்டிருக்கிறார்கள். அடப்பாவிகளா! நீங்க எப்ப சட்டப் போராட்டம் நடத்தி வென்றீர்கள்? முதலில் உயர் நீதிமன்றத்திற்குப் போய் போடக்கூடாத இடத்தில் வழக்கைப் போட்டுத் தோற்றீர்கள். யாரோ மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குப் போய் வாதாடி வென்றபிறகு, ஓடிப்போய் முன்னர் கொடுத்த நீதிமன்றத் தீர்ப்பைக் காட்டி, எனக்கும் அப்படித்தான் அநீதி நடந்தது என்று தெரிவித்து ஏதோ தப்பிக் கொண்டீர்கள். இதில் நீங்கள் எப்போது சட்டப் போராட்டம் நடத்தினீர்கள்? இந்த சுவரொட்டிகளைக் கடக்கும்போதெல்லாம் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

தமிழ் அரசுக் கட்சியின் சுவரொட்டியில் நாடு யாரோடு வேண்டுமானாலும் இருக்கட்டும் என்று போட்டிருக்கிறார்கள். சீனாவோடு இருந்தால் பாரவாயில்லையா என்று கேட்கத் தோன்றுகின்றது. இப்போது இப்படி எழுதிவிட்டு அதற்கு மட்டும் குத்துதே குடையுதே என்று ஓடி வருவார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார நேற்று வியட்நாம் புறப்பட்டார். மாலையில் அவர் புறப்பட்டார். மே 6 வியட்நாமில் தொடங்கும் சர்வதேச வெசாக் விழாவின் தொடக்க விழாவில் அவர் பங்கேற்கிறார். அன்றுதான் உள்ளாட்சித் தேர்தல். அப்படியானால் தேர்தலில் வாக்களிக்க அவர் இருக்கமாட்டாரா என்ற ஆதங்கம் பலருக்கும் இருக்கக்கூடும்? என்பிபிக்கு ஒரு வாக்குப் பேச்சே என்று யாரும் கவலைப்படத்தேவையில்லை, மே 6 பிற்பகலே இலங்கைக்குத் திரும்பி, ஓடிச் சென்று தான் வாக்களிப்பார் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

‘சர்வதேச வெசாக் விழாவில் தலைமை விருந்தினராக நான் வியட்நாம் செல்கிறேன். அந்த வாய்ப்பு ஆறாம் தேதி காலை எட்டு மணிக்கு. அதுதான் இலங்கையில் தேர்தல் நடைபெறும்நாள். நான் அங்கிருந்து அன்றே பகலே திரும்பி வாக்களிப்பேன்” என்று தொலைக்காட்சி கலந்துரையாடலில் பங்கேற்ற ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச வெசாக் விழாவின் தொடக்க விழா முடிவடையும் போது இலங்கையில் இரவு சுமார் பத்து மணியாகிவிடும், ஆனால் ஜனாதிபதிய இடையிலேயே கிளம்பி வந்துவிடுவார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ரவுடி அமைச்சர்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்துள்ளீர்கள் எனக் கேட்கச் சொல்லுங்கள். அவரும் அவரது யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளரும் சேர்ந்து வதிவிடப் பிரச்சினையில் மோசடி, ஊழல் செய்கிறார்கள் என்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்.

யாழ்ப்பாணம், கிட்டு பூங்காவில் நேற்று இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அசுக் கட்சியின் இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் எங்கள் இருப்பின் அடையாளம், தமிழ் மக்களின் கலாசார அடையாளம். இலங்கைத் தமிழர்களை, வெளிநாடுகளுக்கு எங்கு சென்றாலும் யாழ்ப்பாணத் தமிழன் என்பார்கள். அது எங்களுடைய மொழி, கலாசாரத்தின் அடையாளமாக இருக்கின்றது.

இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளவர்களைப் பற்றி பலவிதமான கேலியான விடயங்கள் உலா வருகின்றன. கல்விக்குப் பெயர்போன கல்விச் சமூகம் செறிந்த இந்த மண்ணிலே இருந்து இவர்கள் எப்படி பிரதிநிதிகளாகப் போனார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

ஒருவர் சொல்கின்றார் யாழ்ப்பாணம் ஏழாலைக்குள்தானே இருக்கின்றது என்கின்றார். இதற்கு முன்னர் இரண்டு இலட்சம் மக்கள்தான் நாட்டின் சனத்தொகை என்றார். சரி அவருக்குக் கணக்குத்தான் தெரியாது என்றால் புவியியலும் தெரியாது. இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டினால் அவர்களது ரவுடி அமைச்சர், அவரை ரவுடி அமைச்சர் என்பதற்குக் காரணம் ரவுடித்தனமாகச் செயற்படுகின்றார் என்றபோது அவர் அதனை மறுக்கவில்லை, அடுத்த நாள் நானும் ரவுடிதான் எனச் சொல்லி ஒத்துக்கொள்கின்றார். அவர் ஒத்துக்கொண்ட காரணத்தினாலேயே அவருக்குப் பிடித்த அடைமொழியாக இருக்கின்றது. அவருக்கு வேறு அடைமொழி பாவிக்க முடியாது. இந்த ரவுடி அமைச்சர் சொல்லுகின்றார் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் வேட்டிகட்டுறார், கொழும்பில் கால் சட்டை போடுகின்றார் என்கின்றார். நான் என்ன ஆடையில் இருந்தால் உங்களுக்கு என்ன ஐயா வருத்தம். எனக்கு வழக்குத் தாக்கல் செய்யத்தானே தெரியும் என்கின்றார் அவர். ஆம் எனக்கு வழக்குத் தாக்கல் செய்யத் தெரியும்.

உங்களுடைய கட்சி இதுவரைக்கும் ஊழலுக்கு எதிராகத் தாக்கல் செய்த அனைத்து வழக்குகளிலும் என்னைத்தான் சட்டத்தரணியாக நியதித்திருக்கின்றார்கள். உங்களுக்கு அது தெரியுமோ தெரியாது. உங்களுக்கு அது தெரிய வாய்ப்பில்லை. உங்களது கட்சித் தலைவர்களிடம் கேளுங்கள் ஊழலுக்கு எதிரான வழக்குகளில் ஏன் சுமந்திரனைச் சட்டத்தரணியாக நியமித்துள்ளீர்கள் எனக் கேளுங்கள்.

மார்ச் மாதமும் சீனி ஊழல் தொடர்பான வழக்கு வந்தது. அதில் சுனில் ஹந்துன்நெத்தி அமைச்சர்தான் மனுதாரர். அவர் சார்பில் நீதிமன்றில் வாதாடுபவர் நான். ஊழலுக்கு எதிராக அது உங்களுடைய கட்சியானாலும் எவரது கட்சியானாலும் முதலிலே வாதாடுவதற்கு என்னைத்தான் நிறுத்துகின்றார்கள். சத்ருரங்க அபயசிங்க என்னும் உங்களது பிரதி அமைச்சர் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புச் செய்யப்பட்டபோது இந்த நாட்டுத் தொழிலாளர்களின் சேமலாப நிதியைத் திருடுவதற்கு ஒப்பானது எனச் சொல்லி உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தபோது அவருக்காகவும் நான்தான் நீதிமன்றம் சென்றேன் ஐயா.

ஊழியர்களின் சேமலாப நிதியை எடுத்து கடன் மறுசீரமைப்பை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டதற்கு எதிரான வழக்கில் என்னை அழைத்து. வாதாடச் சொன்னீர்கள். இன்றுஅதே கடன் மறுசீரமைப்பை நீங்கள் தொடர்ச்சியாக கொண்டு செல்கின்றீர்கள். தொழிலாளர்களை சுரண்டுவதாக நீங்களே சொன்ன அதே விடயத்தை ஒருவித மாற்றமும் இல்லாமல் தொடர்ச்சியாக நீங்கள் கொண்டு செல்கின்றீர்கள்.

தேர்தலின் முன்பு இதனை எல்லாம் மாற்றி அமைப்போம் என்றீர்கள். ஒரு வசனம்கூட மாற்றப்படவில்லை அப்படியே கொண்டு செல்லப்படுகின்றது. முதலாளித்துவ ஒப்பந்தம் என்றீர்கள், நீங்கள் தொழிலாளர் வர்க்கம் என்று சொன்னீர்கள். ஆனால், அந்த முதலாளித்துவ ஒப்பந்தத்தையே கொண்டு செல்கின்றீர்கள். இது ஊழல் இல்லையா?.

ஊழலுக்கு எதிரானவர்களாக உங்களைக் காட்டிக்கொண்ட நீங்கள் இன்று நீங்கள் செய்கின்ற ஊழல் மிக மோசமான ஊழல். ஒருவரைச் சபாநாயகராக நியமித்தீர்கள். அவர் தன்னைக் கலாநிதி என்று சொல்லிக்கொண்டார். அதைக் கேள்வி கேட்டவுடன், ’கலாநிதி சான்றிதழை தவற விட்டுவிட்டேன். எனது பல்கலைக்கழகத்தில் இருந்து எடுக்க வேண்டும். அதுவரை பதவி விலகுகின்றேன்.’ என்றார்.

இது நடந்தது டிசெம்பர் மாதம். நான்கு மாதங்கள் கடந்து விட்டன. இன்னமும் கலாநிதிப் பட்டம் வரவில்லை இது ஊழல் இல்லையா? நீங்கள் உங்களது 159 பேரில் தெரிந்து எடுத்து நாட்டின் 3 ஆவது பிரஜையாக நியமிப்பதற்கு தெரிந்தெடுத்த நபர் கையும் களவுமாக பிடிபட்ட பிறகு அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியிருக்கவேண்டும்.

உங்கள் கட்சி அவரைக் கட்சியில் இருந்தே துரத்தியிருக்க வேண்டும். ஏன் இன்னும் செய்யவில்லை? மக்களை முட்டாள் ஆக்காதீர்கள்.

இவ்வாறான இன்னுமோர் ஊழலை நாம் சுட்டிக்காட்டியபடியால் விரிவுரையாளர் கபிலனையும் வைத்துக்கொண்டு அந்த அமைச்சர் ஊடகவியலாளர் மாநாடு நடத்தியுள்ளார். யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான வேட்பாளர் மனுவிலே விரிவுரையாளர் கபிலன் தனது வதிவிடமாக எந்த முகவரியைக் கொடுத்திருக்கின்றார்? அரியாலையில் உள்ள உங்களது காரியாலய முகவரியைத் தனது வதிவிடமாகப் பொய்யாகச் சொல்லியிருக்கின்றார். அவர் மிகப் பெரிய ஊழல்வாதி. அவர் ஏழாலையில் இருக்கின்றார் என உங்களது முதலாவது எம்.பி. சொல்கின்றார்.

யாழ்ப்பாணம் ஏழாலையில்தானே இருக்கின்றது. ஆகையினால் தேர்தல் கேட்கலானே என உளறுகின்றார். அவர் ஏழாலையில்தான் இருக்கின்றார் என எல்லோருக்கும் தெரியும். அவரது முகவரி, வாக்கு எல்லாம் ஏழாலையில்தான் இருக்கின்றன. யாழ். பல்கலைக்கழகத்திலும் அவரது முகவரியைப் பாருங்கள். அரியாலையா இல்லையே. ஏன் இந்தப் பொய்யுரை.

வேட்பு மனுவிலேயே பொய்யான தகவலைக் கொடுத்த ஊழல்வாதியை உங்களது மாநகர முதல்வர் வேட்பாளர் என அறிவிக்கின்றீர்கள். உங்களுக்குச் சட்டம் தெரியாது என்பதற்காக நாங்கள் என்ன செய்வது? கடந்த உள்ளூராட்சி மன்றக் காலத்திலே இதே யாழ்ப்பாணம் மாநகர சபையிலேயேதான் சபையின் எல்லைக்கு வெளியே இருந்த ஒருவர், ஒரேயொரு வீதிக்கு வெளியில் கொக்குவிலில் இருந்தவர் மாநகர சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டபோது நாங்கள் வழக்குத் தாக்கல் செய்து அவரை வெளியேற்றினோம். வழக்குப் பிரதியும் உண்டு. எங்களுக்கு வழக்குத் தாக்கல் செய்யத் தெரியும். 3 வருடங்கள் அவரை வெளியே வைத்திருந்தோம்.

எதற்காக? தன்னுடைய வதிவிடத்தை பொய்யாக உரைத்தமையால். வேட்பு மனுவிலே ஒரு பொய்யான முகவரியைக் கொடுத்தால் தப்பி விடலாம் என எண்ணிவிட வேண்டாம். இதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அவர் சபை அமர்வுகளில் பங்குகொள்ளவோ, வாக்களிக்கவோ முடியாது என இடைக்காலக் கட்டளையைக் கொடுத்தது. ரவுடி அமைச்சருக்கு இதைப் படித்து விளங்க முடியுமோ தெரியாது.

இதைக் கேட்டால் கொழும்பில் இருக்கும் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் தேர்தல் கேட்கலாம் என்றால் ஏழாலையில் இருப்பவர் ஏன் யாழ்ப்பாணம் மாநகர சபையில் தேர்தல் கேட்க முடியாது? யாழ்ப்பாணமும் ஏழாலையில்தானே இருக்கின்றது என ஒருவர் சொல்கின்றார். நாடாளுமன்ற சட்டத்திலோ, மாகாண சபை சட்டத்திலோ இப்படியான தேவைப்பாடு கிடையாது. ஆனால், உள்ளூராட்சிமன்ற சட்டத்திலே இந்தச் சிறப்பான மிகத் தெளிவான சட்டத் தேவைப்பாடு பிரிவு 7 மற்றும் 8 இல் இருக்கின்றது. அதைத் தெரிந்துகொண்டுதான் ஒரு பொய்யான முகவரி கொடுக்கப்பட்டுள்ளது.

ஐயா ரவுடி அமைச்சரே நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன் கஜேந்திரகுமாரைப் போலவோ, விக்னேஸ்வரனைப் போலவோ கொழும்பிலே பிறந்தவனும் அல்லன். எனது யாழ்ப்பாணம் பூர்வீகத்தைக் கேள்வி கேட்க இவர்கள் யார்? அவர்களது பூர்வீகத்தை நாங்கள் கேள்வி கேட்கவில்லை.

தமிழ் பேசுகின்ற மக்கள் மலையகத்தில் இருந்தாலும் அது முஸ்லிமாக இருந்தாலும் தமிழ் பேசுகின்ற மக்களுக்கு உரித்தான கட்சியாகத்தான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்றும் இருந்திருக்கின்றது. என்னை

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# தேசிய கட்சிகளுக்கு போடும் வாக்கு நமக்கு நாமே சூனியம் வைப்பதாகும்

## சுயேச்சை வேட்பாளர் பிறேமதாஸ் தெரிவிப்பு

தேசிய கட்சிகளுக்கு போடும் வாக்கு நமக்கு நாமே சூனியம் வைப்பது போன்றது என வவுனியா மாநகர சபையில் பசு சின்னத்தில் சுயேட்சைக் குழு -02 இல் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் சி.பிறேமதாஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியல் ஆதிக்கம் நிறைந்த அதிகார சபைகளே எங்கும் காணப்படுகின்றது. சிங்கள தேசிய கட்சிகளாலும், தமிழ் தேசிய கட்சிகளாலும் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, தலை மையிழந்து கேட்போர் அற்ற நிலையில் நிர்க்கதியாகி துரோகிகளுடன் இருப்பதை விட எதிரியுடன் சேர்ந்து உரிமை இழந்தாலும் நிம்மதியாக வாழ்ந்தால் போதும் என மனவிரக்தி ஏற்பட்டு இன்றைய அரசாங்கத்தை ஆதரித்து வடக்கில் 5 ஆசனங்களை கொடுத்துள்ளோம்.

159 நாடாளுமன்ற உறுப்பினர்கள். சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. என்ன செய்ய முடியாது. அதுபோதாதுஎன்றுஉள்ளூராட்சிசபைஅதிகாரங்களை யும் தேசிய மக்கள் சக்திக்கு தாருங்கள். அப்போது தான் நிதி ஒதுக்குவோம் என்கிறார் ஜனாதிபதி. அதிகாரம் தந்தால் மட்டுமே நிதி எனக் கூறுவது ஊழலுக்கு ஒப்பான கருத்து இல்லையா.

எமது மக்களின் வரிப்பணம், தண்டப்பணம் என்பனவே திறைசேரியில் இருந்து பிரித்து அனுப்பப்படுகின்றது. இதுஎந்தஅரசாங்கம்வந்தாலும் செய்ய வேண்டிய கட்டாயம். தேசிய கட்சிகளுக்கு அளிக்கும் வாக்கானது சிறுபான்மையினரின் விகிதாசாரத்தை கேள்விக்குறியாக்கும். நீங்கள் சிந்தியுங்கள்.

எமது எல்லை நகரமான வவுனியா நகரசபை மாநகர சபையாக மாறும் போது எல்லைகள் விஸ்தரிக்கப்படும். இன விகிதாசாரம் மாறும். அதன் முன்னேற்பாடாகவே இந்த அரசு வடக்கை குறிவைத்து பிரசாரம் செய்கிறது. நாடாளுமன்ற தேர்தலில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவு செய்யவில்லை. அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என்றார்கள். இப்போ அப்படியான கைதிகள் இல்லை என்கிறார்கள். நாம் தமிழர்கள் என்பதால் எமது அரசியல் கைதிகள் விடுவிக்கபடவில்லை.

சுனாமி கட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது வடக்கிற்கு உதவக் கூடாது என போராட்டம் செய்த தோழர்களின் அரசு. அப்படியான மனிதபிமானம் இல்லாதவர்கள் எப்படி நமக்கான தீர்வை தருவார்கள். இருந்தும் நம்பினோம். வாக்களித்தோம். அதுவும் போதாது என்று மக்களுக்காகவுள்ள உள்ளூராட்சி சபைகளின் கடைசி அதிகாரத்தையும் தாருங்கள் என்று கேட்டு நிற்கிறார்கள்.

எமது கிராம அபிவிருத்திக்கான தேர்தல். தமிழ் தேசிய கட்சிகளின் ஒற்றுமையின்மையே இதற்கு எல்லாம் காரணம். அவர்கள் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும், விரக்தியும், நிர்க்கதியாக நின்ற போது சந்தர்ப்பம் பார்த்து உள்ளே நுழைந்து ஆசை வார்த்தை கூறி ஏமாற்றுகிறார்கள். விழிப்படையுங்கள். தேசிய கட்சிகளுக்கு போடும் வாக்கு நமக்கு நாமே சூனியம் வைப்பது போன்றது.

உங்கள் கிராமத்தில் உள்ள தற்துணிவுள்ள, சிறந்த சமூக சேவை செய்கின்ற, ஒழுக்கமுள்ள, கருணை உள்ளம் கொண்ட ஒருவரை தெரிவு செய்யுங்கள். இது உங்களுக்கான தேர்தல். தேசிய கட்சிகள் வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சுயமாக சிந்தித்து வாக்களியுங்கள்.

நாம் பல்வேறு புதிய திட்டங்களுடன் மக்களுக்கான சேவையை கொண்டு இந்த தேர்தலில் களமிறங்கியுள்ளோம். எமக்கு கிடைக்கும் கொடுப்பனவை, எமது கிராம, கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கே கொடுப்போம். எனவே மக்கள் சிந்தித்து வாக்களியுங்கள் எனத் தெரிவித்தார். 100

# ஆளும்தரப்புக்கு ஒரு பரீட்சைக் களமாக உள்ளாட்சித் தேர்தல் அமையப்போகிறது

## மு.கா. தலைவர் ஹகீம் தெரிவிப்பு

(பர்ஸான்)

ஜனாதிபதி மரத்தைப் பற்றித்தான் பேசுகிறார். அவருக்கு மரத்தில் பீதி இருப்பது போல விளங்குகிறது. அவருக்கு மரக் காய்ச்சல் வந்திருப்பதாக சொல்கிறார்கள் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹகீம் தெரிவித்தார்.

ஓட்டமாவடியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் -

நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அரசுக்கு ஒரு பரீட்சைக் களமாக அமையப் போகின்றது.

நடைபெற்று முடிந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு நாடு முழுவதிலுமுள்ள 70 சத வீதமான முஸ்லிம்கள் வாரிவாரி வாக்களித் தார்கள். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் ஊழல் ஒழியும், கள்வர்களை பிடிப்பார்கள் என்று மக்கள் வாக்குகளை அள்ளிக் கொடுத்தார்கள்.

நாங்கள் கோடிக் கணக்கான அபிவிருத் திகளைச் செய்தோம் அதைப் பற்றி யாரும் கணக்கெடுக்கவில்லை.

அரசாங்கம் ஒரு வடிகானைக் கூட கட்டாத கட்சியாகத்தான் காணப்படுகிறது.

அவர்கள் அரகல மக்கள் போராட்டத்தின் பின்னால் ஒழிந்து கொண்டு நாங்கள்தான் போராட்டம் செய்தோம் என்று படத்தைக் காட்டி ஆட்சியை கைப்பற்றினார்கள்.

அவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு குறைந்த பட்ச கௌரவத்தைக் கூட தரவில்லை. ஓர் அந்தஸ்துள்ள அமைச்சரை கூட தராமல் சாட்டுப்போக்கு சொல்கிறார்கள்.

அப்படி தகுதியானவர்கள் இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு இந்த சமூகத்தை இழிவான நிலையில் பார்க்கின்ற ஆட்சியாளர் கூட்டத்திற்கு வருகின்ற தேர்தலில் மக்கள் என்ன பதிலை சொல்லப் போகிறார்கள்? என்று ரவூப் ஹகீம் கேள்வி எழுப்பினார்.



இனி, சூடுசுரணை இல்லாமல் அவர்களுக்கு வாக்களிக்கின்ற நிலைவரம் கிழக்கு மாகாணத் தில் நடைபெறாது என்பது மிகத் தெளிவான விசயம். கிழக்குக்கு வெளியிலும் அதே நிலைவரம்தான் காணப்படுகிறது.

பலஇடங்களில் தேசியமக்கள்சக்திக்கு வாக் களித்தவர்கள் ஏனைய கட்சிகளுக்கு வாக்க ளிக்க சிந்திக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத் தைப் பற்றி சிந்திப்பதற்குத் தயாரில்லை.

பங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக இல்லாமல் செய்வோம் என்று சொன்னவர்கள் பலஸ்தீனுக்கு ஆதரவாக ஸ்டிக்கர் ஒட்டியதற்காக வேண்டி அப்பாவி முஸ்லிம் இளைஞனை கைது செய்தார்கள்.

இவர்கள் பயங்கரவாதம் செய்யாத ஆக்கள் போன்று அவர்கள் செய்தது எல்லாம் பயங்கரவாதம்தான். எத்தனை பஸ்களை, ரான்ஸ்போமர்களை கொளுத்தினார்கள். அரச ஊழியர்கள், இராணுவம், பொலிஸார் ஆகியோர் கொலை செய்தார்கள்.

இதற்கெல்லாம் அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். இவர்களது நடவடிக்கைகளுக்கு வரப்போகும் தேர்தலில் முஸ்லிம் சமூகம் தகுந்த பதிலடியை கொடுக்க வேண்டும். - என்றார்.

# சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளியில் துப்புரவுத் தொண்டு

(அஷ்ரப்கான்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தோட்ட வளாகத்தில் மாபெரும் சிரமதானநிகழ்வொன்றை நேற்று (சனிக்கிழமை) காலை 06.00 மணி முதல் மேற்கொண்டது.

ஜும்ஆப் பெரிய பள்ளி வாசலின் தோட்டப்பராமரிப்புக் குழுத் தலைவரும் உதவிச் செயலாளருமான எஸார் மீராசாஹிபின் ஒருங்கிணைப்பில் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில், அதன் தலைவர் டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பர் தலைமையில், இச்சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.

நம்பிக்கையாளர் சபையின் செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.முஹம்மட் முனாஸ், பொருளாளர் தொழிலதிபர் ஏ.எல்.எம்.முஸ்தபா, பிரதித் தலைவர் தொழிலதிபர் எம்.எம்.எம்.முபாரக், உதவித் தலைவர் மௌலவி எம்.எம்.எம்.சலீம் (ஷர்க்கி), உதவிச் செயலாளர் ஏ. பர்ஹாம், உதவிப் பொருளாளர் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் எம்.நஜீம் உட்பட நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், தோட்ட பராமரிப்புக் குழுவின் முன்னணி செயற்பாட்டாளர்களான ஏ. ஜெஸ்மீர், எம்.ஐ. நஜீம் உட்பட தோட்டப் பராமரிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் மஹல்லாவாசிகள், ஜமா அத்தினர், பிரதேச பொது அமைப்புகள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் இச்சிரமதான நிகழ்வில் கலந்து கொண்டனர்.





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஈழ சைவத்தின் ஒளிச்சுடர்

**யாழ்ப்பாணத்தின் சைவத் தூணாக விளங்கிய நல்லை திருஞானசம்பந்தர் சுவாமிகள் ஆதீனத்தின் இரண்டாவதுகுருமகாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வைகாசி 1, 2025 அன்று இறையடியடைந்த செய்தி, தமிழர்கள் மத்தியில் மட்டுமல்லாது, உலகெங்குமுள்ள ஆன்மீகவாதிகளிடையே பெரும் துக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவருடைய மறைவு, ஈழ சைவ சமயத்தின் பெரும் இழப்பாக கருதப்படுகிறது.**

**சுவாமிகள், பல்லாண்டுகளாக நல்லை ஆதீனத்தின் தலைமை பொறுப்பில் இருந்து, ஆன்மீகம், கல்வி, பண்பாடு மற்றும் சமூக நலத்துக்காகத் சோர்வின்றி முயற்சிகளை மேற்கொண்டவர். நல்லூர் கந்தசுவாமி கோவிலின் அருகாமையில் அமைந்துள்ள நல்லை ஆதீனம், ஈழத்தில் சைவ சமயத்தின் சுடரொளியாக விளங்குவதற்கு காரணமாக இருந்தது இவரது அர்ப்பணிப்பானசேவையே. கல்விவளர்ச்சி, நூலகங்கள், மாணவர் காப்பகங்கள், ஆன்மிகத் தெருப்பாடல், தேவாரப் பயிற்சி ஆகியவற்றை வளர்க்கும் பணி இவரின் தலைமையில் பலமடங்காக விரிவடைந்தது.**

**சமூக நீதி, சமய சகிப்புத் தன்மை, மற்றும் சைவ சமய இலக்கண வளர்ச்சி ஆகியவற்றின் களத்தில் இவர் எடுத்துச் சென்ற முயற்சிகள் பாராட்டத்தக்கவையாகும். அவருடைய வார்த்தைகளும் செயல்களும், சமயக் கருத்துக்களை மட்டும் அல்ல, மனிதநேயத்தை வெளிப்படுத்தும் பண்புகளை கொண்டிருந்தன. தமது வாழ்க்கையின் இறுதிக்காலத்தில்கூட, சுவாமிகள் தம் உடல்நலக்குறைவின்போதும் சமூகத்தின் நலனுக்காக பணியாற்ற விரும்பியதை நாம் உணர்கிறோம்.**

**சுவாமிகள் தமது இறுதிச் சடங்குகள் தொடர்பான விருப்பத்தை எழுத்து மூலமாகப் பதிவுசெய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஆதீனங்களில் பாரம்பரிய ரீதியாக சமாதி (அடி மேடைக்குள் உடலை வைக்கும் முறை) நிகழ்த்தப்படுவதுண்டு. ஆனால், சுவாமிகள் அதிலிருந்து விலகி, சைவ மரபின்படி தகனம் செய்ய வேண்டுமென தெரிவித்து, 'நான் இறந்த பிறகும் சமயக் கொள்கைகளை நிலைநாட்ட விரும்புகிறேன்' என்ற அதிரடியான ஆன்மீக எடுத்துக்காட்டை வகித்துச் சென்றார்.**

**அவருடைய இறுதி நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி மயானத்தில் இடம்பெற்றன. சுவாமிகளின் உடலுக்கு அரசியல், மத, சமூகத் தலைவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கானபொதுமக்கள்அஞ்சலிசெலுத்தினர். இவ்வாறு அவருக்குக் கிடைத்த மரியாதை, அவரது வாழ்க்கையும், பணிகளும் எவ்வளவு மதிக்கத்தக்கவை என்பதை எடுத்துக்காட்டுகிறது.**

**இறுதியாக, நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஈழ சைவ சமயத்தின் ஒரு ஒளிச்சுடராக இருந்தார். அவரது மறைவால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப முடியாவிட்டாலும், அவர் விட்டுச் சென்ற ஆன்மீக வழிகாட்டுதல்கள், வருங்காலத் தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கக்கூடியதாக இருக்கும். அவரது ஆத்மா சைவலோகத்தில்சாந்தியடைய, நம்மது வணக்கங்கள்.**

# சிங்கள பேரினவாதம் ஒரு காலத்திலும் தமிழருக்கு எதுவும்செய்ய தயாரில்லை

## நாங்கள் அவர்களுடன் சேர்ந்து பயணிப்பதால் என்ன பயன் என்கிறார் சிறிதரன்



சிங்கள பேரினவாதம் ஒரு காலமும் தமிழர்களுக்காக எதுவும் செய்ய தயார் இல்லை. நாங்கள் அவர்களுடன் சேர்ந்து பயணிப்பதால் என்ன பலன். நாங்கள் நாங்களாக இருக்கும் வரைக்கும், நாங்கள் பலமான ஒரு சக்தியாக இருக்கும் வரைக்கும் நாங்கள் ஒற்றுமையாகவும் பலமாகவும் இருக்கின்றோம் என்பதை உலகம் புரிந்துகொள்ளும் வரைக்கும் தான் எங்களுக்கு விடிவு சாத்தியமாக இருக்கும் என கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

மன்னார் அடம்பனில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஏற்பாடு செய்த மக்கள் சந்திப்பு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்களாக நாங்கள் வாழ வேண்டும் என்றால் - தமிழர்கள் தம்மை தேசிய இனமாக அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்றால் - நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்களாக வாழ வேண்டும் என்றால் - எம் மிதாக அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த அரசாங்கத்திற்கு தமிழர் தரப்பால் இரு பிரச்சினைகள் உள்ளது. ஒன்று ஜெனிவாவில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம். தமிழர்கள் மீது இனப்படுகொலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் போர்க் குற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளார்கள். அவர்களுக்கு உணவு அனுப்பாமல் கொல்லப்பட்டுள்ளார்கள்.

நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இருந்த போது 70 ஆயிரம் பேருக்கு தான் உணவும் அனுப்பப்பட்டது. குழந்தைகள் குண்டுத்தாக்குதல்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இதனை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இதனை அறிக்கை மூலம் ஆவணப்படுத்தி ஜெனிவாவுக்கு, ஏனைய உலக நாடுகளுக்கும் கொடுத்தவர் வேறு யாருமல்லர் மன்னார் மறைமாவட்டத்தின் மறைந்த ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள்.

எந்த அரசியல் கட்சிகளும் அதனை வழங்கவில்லை. நாங்கள் சாட்சியம் அளிக்கவில்லை. அதை வழங்கியது ஒரு மத தலைவர். அவர் அரசியல்வாதி அல்லர்.

தமிழ் தேசிய இனத்தை நேசித்ததால் தமிழ் இனம் பற்றி அவர் சிந்தித்தமையால் இந்த இனத்திற்காக இந்த இனத்திற்கு எதிராக இடம்பெற்ற அநியாயத்தை உலகம் வரை கொண்டு சென்ற ஓர் உண்ணதமான இறை தூதர் தான் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள்.

அவர் வழங்கிய ஆவனத்தை இன்று அழிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இலங்கைக்கு இந்த ஆவணம் ஒரு பாரிய தலையிடி. - என்றார்.

# சவூதி அரேபிய தூதர் தென்கிழக்கு பல்கலைக் கழகத்திற்குப் பயணம்

(ஹலால்தீன்)



சவூதி அரேபியாவுக்கான இலங்கையின் தூதுவர் உஸ்தாத் காலித் ஹமூத் அல்கஹ்தானி தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 17 ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டுள்ளார்.

இலங்கை நாட்டுக்கும் சவூதி நாட்டுக்கும் இடையில் பல்வேறு மனிதாபிமான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையிலேயே இவ்வாறு இவர் கலந்து கொண்டிருக்கிறார்.

நேற்றும் இன்றும் (3,4 ஆந்திகதிகளில் ) நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ள உள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் மிகவும் நெருக்கமான உறவுகள் இருந்து வருகின்றன.

இலங்கை நாட்டுக்கு பல்வேறுபட்ட உதவிகள் சவூதி அரேபியா நாட்டினால் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன.

இன்றைய தென்கிழக்கு பல்கலைக்கழக விஜயம் நிச்சயமாக இந்த பல்கலைக்கழகத்திற்கு பல்வேறு தேவைகள் இருக்கின்ற நிலையில் அவை சவூதி அரேபியா நாட்டினால் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு விஜயம் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் மிகவும் முக்கியமான கிழக்கு மாகாணத்தில் ஒரு முத்தாக இந்த பல்கலைக்கழகம் திகழ்கிறது.

அந்த வகையில் இந்த விஜயம் மிகவும் முக்கியமானது. சவூதி அரேபிய தூதுவர் கிழக்கு மாகாண மக்கள் நன்றி உணர்வோடு சந்தோஷமாக வரவேற்றனர்.

பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற பல்வேறுகளில் இவர் கலந்து கலந்து கொள்ள உள்ளார்.

# ஜனநாயக தேசிய கூட்டணி மகத்தான வெற்றி பெறும்

## வேட்பாளர் பத்மநாதன் நம்பிக்கை



(கேதீஸ்)

விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்காது என்ற கூற்றை உண்மையாக்கிய மலையக படைப்பாளி அமரர் பெரியசாமி சந்திரசேகரன் என நுவரெலியா மாவட்டத்தில் கொட்டக்கலை பிரதேச சபைக்கு கிறேட்வெஸ்டன் தொகுதியில் ஜனநாயக தேசிய கூட்டணியின் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடும் என சிவசாமி பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

தேடல் இல்லாத எந்த உயிரினங்களினாலும் தமது வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடைய முடியாது. இதே போன்று மக்கள் தலைவனாக அல்லது சமூக வழிகாட்டியாக இருக்க வேண்டிய ஒருவரிடம் தான் முன்னெடுக்கும் பிச்சினைகளைப் பற்றிய தேடலும் அதற்கான தீர்வும் உண்மையாக இருக்கும் போதுதான் அவ்வாறானவர்களை சமூகமும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும். அந்தவகையில் தனிமனிதனாக இருந்து தன் சமூகத்தின் தலைவிதியையே திருத்தி எழுதிய தலைவன் சந்திரசேகரனிடம் அவரது இளமைப் பருவம் முதல் ஒவ்வொரு துறையிலும் இருந்த ஆழமான தேடுதலே பிற்காலத்தில் அனைவரும் ஏற்கும் தலைவனாக அவரை மாற்றியது.இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அரசியல் அமைப்பாளராக இருந்தப்போதும் சரி,அரசாங்கத்தில் கெபினட் அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்தப் போதும் சரி,அல்லது தேசிய கட்சிகளுடன் சர்வதேச அமைப்புகளுடன் அல்லது மலையக கட்சிகளுடன் உறவுகளை பேணிய போதும் சரி தனக்கு சரியெனில் பட்ட கருத்துப் போராட்டங்களை அவர் துணிவுடன் முன்வைத்தமைக்கு பிரதான காரணி அவரிடமிருந்த உண்மையான தேடல் தன்மையே ஆகும். தேடி வருபவர்களது தேவைகளின் அடிப்படை பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வினை பெற்றுக்கொடுத்தவர்.இவ்வாறான சமூக தேடல் தான் அவரை படிப்படியாக அனைவர் மத்தியிலும் நேசமிக்கவராக்கியது.

மலையகத்தின் அனைத்து அமைப்புகளையும் சமமாக கௌரவித்ததோடு தனது அரசியல் செயற்பாடுகளுக்கு அனைத்து அமைப்புகளினதும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டவர். மலையகத் தமிழர்களின் உரிமைகள் எவ்வாறு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதனை இலங்கையின் தேசிய கட்சிகளுக்கும் அதுபோல் இலங்கையின் சகல முற்போக்கு கட்சிகளுக்கும் புள்ளிவிவரங்களோடு சமர்பித்தவர் அவர். ஒரு மனிதனுக்கு தன் வாழ்க்கை மீது தன்னம்பிக்கை ஏற்படுத்தும்போது தான் தனக்காக, தன் குடும்பத்துக்காக தம் எதிர்காலத்துக்காக சேமிக்க ஆரம்பிக்கிறான். அவனுக்கென ஒரு சொந்த வீடு சொந்தமாக இருக்கும் போதுதான் அவனது வாழ்க்கை முறையே மாறும் என்று கூறி அதன் தொடர்ச்சியாகவே தனி வீட்டுத் திட்டத்தினை ஆரம்பித்தவர். தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை என்பது அவர்களது வேதனத்தோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்படக் கூடாது என்றும் அதனையும் தாண்டிய சமூக அடையாளத்துக்காக குரல் கொடுக்க வேண்டும் என்று கூறி செயற்பட்டவர்.

10 லட்சம் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் எந்த ஒரு முகவரியும் இன்றி இலங்கை மத்திய மலை நாட்டில் 200 வருட நவீன அடிமைகளாக வாழ்வது பற்றி எமது பூர்வீக நாடான இந்தியா கூட அறிந்திருக்காத நிலையை அங்கு சென்று தெளிவுபடுத்தி, எமது அடையாளத்தை சர்வதேசம் அறியச் செய்தவர். தொழிலுக்காக மாத்திரமே நம் நிர்வாகத்தவர்களுக்கு கட்டுப்பட்டும் ஏனைய அனைத்து தேவைகளுக்கும் அரச கட்டமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதற்காகவே தமிழ் கிராம சேவகர் நியமனத்தை ஏற்படுத்தியவர். இவ்வாறு தனது வாழ்நாள் முழுவதும் தனது மலையக மக்களுக்காக அர்ப்பணித்தவர். இன்று அவர் வழியில் நின்று அரசியல் செய்யும் அவரின் புதல்வி அனுஷா சந்திரசேகரனின் கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும். எனவே இந்த உள்ளூராட்சி தேர்தலிலே எமது மக்கள் எமக்கு வாக்களித்து எம்மை அமோக வெற்றி பெறச் செய்யுங்கள். - என்றார்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# நள்ளிரவு நேரத்தில் திடீரென உட்புகுந்த இராட்சத முதலையை மடக்கிய மக்கள்

(சக்திவேல்)

மட்டக்களப்புதாழங்குடாமுதலாம் குறிச்சி பகுதிக்குள் சனிக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் மக்கள் குடியிருப்பு பகுதி காணிக்குள் திடீரென புகுந்த முதலையை கண்டு அச்சமடைந்து பக்கத்து வீட்டு உறவினர்களை கூப்பிட்டதனை தொடர்ந்து பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து நள்ளிரவில் கடும் போராட்டத்திற்கு மத்தியில் முதலையை மடக்கி பிடித்து கட்டி வைத்துள்ளனர்.



கடந்த ஓரிரு தினங்களாக பெய்த மழை காரணத்தால் மட்டக்களப்பில் உள்ள வாவிகள் மற்றும் குளங்களில் நீர் நிறைந்து காணப்படுவதால் அவற்றிலிருந்து முதலைகள் மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளுக்குள் உள் நுழையும் நிலை அதிகமாக காணப்படுகின்றது.

கிராம மக்களால் மட்டக்களப்பு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்ததை அடுத்து அவர்களும் வருகை தந்து கட்டி வைத்திருந்த முதலையை கடும் போராட்டத்திற்கு மத்தியில் சிரமப்பட்டு பிடித்து பாதுகாப்பாக மீட்டு மனித நடமாட்டம் அற்ற நீர்நிலையில் முதலையை விடுவித்துள்ளனர்.

# பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்த பல்கலை மாணவன்மீது தாக்குதல்



ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனை அதே பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் பலமாக தாக்கி காயப் படுத்தியுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த மாணவன் சிகிச்சைக்காக வெலிகம பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த மாணவன் இது தொடர்பில் தெரிவிக்கையில் -

கடந்த 29 ஆம் திகதி பல்கலைக்கழக விடுதிக்கு வந்த மாணவர்கள் சிலர் தலைக்கவசங்களால் எனது தலை மற்றும் முதுகு பகுதிகளில் பலமாக தாக்கினர்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதைக்கு நான் எதிர்ப்பு தெரிவித்திருந்தேன்.

இதனால்தான் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் என்னை இவ்வாறு தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் எனக்கு நியாயத்தை பெற்றுத்தருமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.






# தென்கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நிகழ்வுகள்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா, சனிக்கிழமை பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் நடைபெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் உபவேந்தர் யூ.எல்.மஜீத் தலைமையில் சனி, மற்றும் ஞாயிர் இரு தினங்களாக நடைபெறவுள்ள இப்பட்டமளிப்பு விழாவில் ஆறு அமர்வுகளில் 2077 மாணவர்கள் பட்டங்களைப்பெறவுள்ளனர்.

முதலாம் நாள் முதல் அமர்வில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கொடகொட பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை பேராசிரியர் கலாநிதி சீதா.பி. பண்டாரவும் மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானியும் கலந்துகொண்டு உரையாற்றினர்.









# வேட்புமனுவே தாக்கல் செய்யாமல் பரப்புரையில் ஈடுபடும் வர்த்தகர்

## வவுனியாவில் இப்படியும் விநோதம்

வவுனியாவில் வேட்புமனுவினை தாக்கல் செய்யாமல் தனக்கு வாக்களிக்குமாறு கோரி பிரபல வர்த்தகர் ஒருவர் தேர்தல் பரப்புரை செய்தி வருகிறார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது.

குறித்த வர்த்தகர் முன்னாள் இராஜாங்க அமைச்சரான காதர் மஸ்தானின் இலங்கை தொழிலாளர் கட்சியின் சின்னமான கங்காரு சின்னத்தை மையப்படுத்தி இப்பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

அவரது உருவம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் நகரில் பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளது. அதில் தன்னை சிறப்பு வேட்பாளர் என்று குறிப்பிட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. 100

# படுகொலையான ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் போராட்டம்

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தினை முன்னிட்டு, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் ஊடகவியாலாளர்கள்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வைமன் வீதியில் யாழ். தொடருந்து நிலையத்திற்கு அருகே ஊடக அமையத்தின் முன்பாக முன்பாக மாலை 3.00 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும்,




தாக்குதலுக்குஇலக்கானஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு நீதி கோரியும் ஊடகவியலாளர்கள் கோசங்களை எழுப்பினர்.







# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சாதாரண தேர்தல் இதில் வெற்றிபெறுவதில் சவால்கள் இல்லையாம்

## திகாமடுள்ள மாவட்ட எம்.பி. ஆதம்பாவா கொக்கரிப்பு

(அஷ்ரப்கான்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சாதாரண தேர்தல் இதிலே வெற்றி பெறுவதற்கு எங்களுக்கு எந்த விதமான சவால்களும் இல்லை நிச்சயம் சபைகளை கைப்பற்றுவோம் என்று திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா தெரிவித்தார்.

காரைதீவில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரிடம்முன்வைக்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றும்போது -

கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றோம். அது போன்று பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றோம். இது ஒரு சாதாரண தேர்தல் இதிலே வெற்றி பெறுவதற்கு எங்களுக்கு எந்த விதமான சவால்களும் இல்லை நிச்சயமாக நாங்கள் சபைகளை கைப்பற்றுவோம்.

நாங்கள் ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கு கற்ற புத்திஜீவிகளை, சிறந்த கல்விமான்களை, மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களை இனம் கண்டு தேர்தலில் நிறுத்தியுள்ளோம்.

எனவே அவர்கள் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கையை எமக்கு உள்ளது.

எதிர்க்கட்சிக்குவாக்களிப்பதன் ஊடாக இந்த மக்கள் எதனை சாதிக்க போகின்றார்கள். எனவே, உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஆளும்கட்சியாகிய எமக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்வதன் ஊடாக உள்ளூராட்சி மன்ற பிரதேச தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

இன்றுஐக்கியமக்கள்சக்தியில் நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்று விட்டு ஒரு முஸ்லிம்



தலைமை ரெலிபோன் சின்னம் செத்துப் போய்விட்டது என்று கூறி வருகின்றது. இவர்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு விதமாகப் பேசுகின்றனர். இவ்வாறு பொய்களை உரைக்கின்ற அவர்களுக்கு பின்னால் முஸ்லிம்கள் ஒருபோதும் நிற்பதற்கு தயார் இல்லை என்பதை கடந்த கால தேர்தல்கள் எங்களுக்கு உணர்த்தின.

எனவே தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவை மக்கள் வழங்கினார்கள். அது போன்று இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் அமோகமான வாக்குகளால்நமது மக்கள் தேசிய மக்கள் கட்சியை வெற்றியடைய செய்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் அல்ல முழு இலங்கையிலும் அபிவிருத்தி என்ற போர்வையிலே பல்வேறு பித்தலாட்டங்கள் ஊழல்கள் இடம்பெற்றதை நாங்கள் அண்மைக்காலமாக அறிந்து வருகிறோம். அதற்கான தண்டனைகளையும்பலர் பெற்று வருகின்றார்கள். அம்பாறை மாவட்டத்திலும் அதே நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதனை சரி செய்து பல்வேறு கிடப்பில் இருக்கின்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை பூரணப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம் என்றும் கூறினார்.

# அண்மையில் வெளியான உயர்தரப் பெறுபேற்றின்படி வடமாகாணத்தில் வவுனியா வடக்கு வலயம் முதலிடம்

வெளியாகிய 2024 ஆம் ஆண்டு உயர்தரப் பெறுபேற்றில் வடக்கு மாகாணத்தில் வவுனியா வடக்கு வலயம் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

வடமாகாணத்தில் 12 கல்வி வலயங்களில் இருந்தும் பரீட்சைக்கு முதல் தடவை தோற்றி சித்தி பெற்றவர்களின் வீதத்தை அடிப்படையாக கொண்டு வடமாகாண கல்வி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பகுபாய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் வெளியாகியுள்ளது.

அதன்படி, வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களில் வவுனியா வடக்கு வலயத்தில் இருந்து முதல் தடவையாக 253 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் 189 பேர் சித்தி பெற்றுள்ளனர். அந்தவகையில் 74.7 சதவீதமானவர்கள் சித்தி பெற்று வடக்கில் முதலாவது இடத்தை பிடித்துள்ளது.

அத்துடன், 73.5 சதவீத சித்தியைப் பெற்று தென்மராட்சி வலயம் இரண்டாம் இடத்தையும், 70.5 சதவீத சித்தியைப் பெற்று மன்னார் வலயம் மூன்றாம் இடத்தையும், 70.1 சதவீத சித்தியைப் பெற்று யாழ்ப்பாண வலயம் நான்காம் இடத்தையும், 69.8 சதவீத சித்தியைப் பெற்று மடு வலயம் ஐந்தாம் இடத்தையும், 69.4 சதவீத சித்தியைப் பெற்று தீவக வலயம் ஆறாம் இடத்தையும், 68.1 சதவீத சித்தியைப் பெற்று வலிகாமம் வலயம் ஏழாம் இடத்தையும், 67.8 வீத சித்தியைப் பெற்று வவுனியா தெற்கு வலயம் எட்டாம் இடத்தையும், 65.2 சதவீத சித்தியைப் பெற்று வடமராட்சி வலயம் ஒன்பதாம் இடத்தையும், 62.3 சதவீத சித்தியைப் பெற்று துணுக்காய் கல்வி வலயம் பத்தாம் இடத்தையும், 60.6 சதவீத சித்தியைப் பெற்று கிளிநொச்சி தெற்கு வலயம் பதினொராவது இடத்தையும், 55.4 சதவீத சித்தியைப் பெற்று கடைசி இடத்தை கிளிநொச்சி வடக்கு வலயமும் பெற்றுக் கொண்டுள்ளன. 100

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு I லட்சத்து 25,000 மாத்திரைகள் அன்பளிப்பு

(தில்சாத் பர்வீஸ்)

சமூக நலனுக்காக செயற்படும்வை2கே அமைப்பின் நற்பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நிலையில் வை2கே அமைப்பின் சுகாதார பிரிவினரால் சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலைக்குவெள்ளிக்கிழமை ஒரு லட்சத்து 25 ஆயிரம் மாத்திரைபக்கெட்டுக்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வெளிநோயாளர் பிரிவின் நோயாளர்களுக்காக இந்த மாத்திரை பக்கெட்டுக்கள் பயன்படுத்தப்படும்.

வை2கே அமைப்பின் இந்த அரிய முயற்சி, வைத்தியசாலையின்தேவைகளைநிவர்த்திசெய்வதோடு மட்டுமல்லாமல், சமூக சேவையில் ஒரு முன்னோடியான உதாரணமாக அமைந்துள்ளது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர் கருத்து தெரிவிக்கையில் –

'வை2கே அமைப்பின் இந்த அன்பளிப்புநமது வைத்தியசாலைக்கு மிகுந்த ஆதரவாக இருக்கும் பாராட்டுதலுக்குரியது. – என்றார்.

இந்நிகழ்வில், வை2கே சுகாதார பிரிவின் ஸ்தாபகர் ஏ.எல்.எம்.அஜ்வத், வை2கே சுகாதார பிரிவின் 2025 ஆம் ஆண்டிற்கான தலைவர் ஏ.எல். சபீர் ஆகியோரால் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கரிடம் கையளிக்கப்பட்டது.

## ரவுடி அமைச்சர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களால்நிராகரிக்கப்பட்ட ஒருவர்என்கின்றார் அந்த அமைச்சர். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருக்குக் கிடைத்த அளவு வாக்கு எனக்கும் கிடைத்தது என்பதை அந்த அமைச்சர் புரிந்துகொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்திலே வந்து தேர்தலில் நிற்கத் திராணி இல்லாத ஒருவர் கடந்த காலத்திலும் தற்போதும் தேசியப் பட்டியலில் வந்து யாழ்ப்பாணத்து பூர்வீகத்தைக் கேள்வி கேட்கின்றார் என்றால் இவரை என்ன செய்வது?

மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டமைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த தந்தை செல்வநாயகம் தன்னுடைய கட்சியை இரண்டாக உடைத்தார். யாருக்காக மலையக மக்களுக்காக. அந்த உறவுகளுக்காக நாம் எப்போதும் எழுந்து நிற்போம். யாழ்ப்பாணத்து மக்கள் ஒரு ரவுடியைத் தொடர்ந்து அமைச்சராக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். யாழ்ப்பாணத்துக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தைப் போக்குவதாக இருந்தால் மக்களின் வாக்குகள் பேசவேண்டும்.உங்கள் வாக்குச்சீட்டில் நீங்கள் இடும் புள்ளடி அதனைச் சொல்லும்.

தந்தை செல்வநாயகத்தின் வழியிலே தொடர்ந்து நடப்போமாக இருந்தால் எம்மோடு கை கோர்க்கத் தயார் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நெல்லியடியிலே வைத்து சொல்லியிருக்கின்றார். நல்ல விடயம். இரு கரம் நீட்டி அவரை அரவணைக்க நாம் தயாராக இருக்கின்றோம். எமது கட்சியின் தலைவருடைய அனுமதியோடு நான் இதனைச் சொல்லுகின்றேன்.

ஏனெனில் சேர்ந்து பயணிப்பதற்காக அவர் அனைவரின் வீடுகளுக்கும் சென்றார். ஒற்றுமைக்கு நாங்கள் பங்கம் விளைவிப்பவர்கள் அல்லர். கஜேந்திரகுமாருக்குத் தெளிவாகச் சொல்லும் செய்தி, ஆம் நீங்கள் அப்படியாகச் சொன்னதை நாங்கள் வரவேற்கின்றோம், சேர்ந்து பயணிக்க நாங்கள் தயார். தந்தை செல்வநாயகத்தின் வழியிலே தொடர்ந்து நடப்போமாக இருந்தால் என்பதில் ஒரு நெருடல் இருக்கின்றது. தந்தை செல்வநாயகத்தின் வழியிலே செல்லாமல் விட்டது நாங்களா, நீங்களா?

சமஷ்டி என்கின்ற இணைப்பாட்சி அல்லது கூட்டாட்சி என்கின்ற பெயரையே வைத்திருக்கின்ற கட்சி எங்களுடைய கட்சி. அதை ஏளனம் செய்தவர்களில் முதன்மையானவர்கள் நீங்கள்தானே. பழையதைப் பேசுவதாக எண்ணவேண்டாம். அவர் கூறியதனால் பேசினேன். அதுவும் சேர்ந்து பயணிக்க வருபவருக்கு எதிராகப் பேசுவதாக நினைக்கவேண்டாம்.

2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து வெளியேறிய முதலாவது கட்சி கஜேந்திரகுமாரின் கட்சி என்று சற்று முன் சிறில் அண்ணையும் கூறினார். ஒற்றுமைக்கு நாம் எதிர்ப்புக் கிடையாது என்பதற்காகவே இதனைக் கூறுகின்றேன்.

எமது கட்சியில் யார் தலைவராக, செயலாளராக இருக்கவேண்டும் என நீங்கள் உங்களது கூட்டத்தில் வைத்து கூறுகின்றீர்கள். உங்களது கட்சியில் யார் தலைவராக இருக்கவேண்டும் என நாங்கள் சொல்கின்றோமா?. பொன்னம்பலம் என்று பெயர் இருந்தால்தான் உங்கள் கட்சியில் தலைவராக இருக்கமுடியும். இதை எப்ப என்றாலும் நாம் இதுவரை சொல்லி இருக்கின்றோமா?.

எங்களது கட்சியில் தந்தை செல்வநாயகம் உயிரோடு இருந்தபோதே இராசமாணிக்கம், இராஜவரோதயம், வன்னியசிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் போன்றோர் தலைவராக இருந்தனர். இந்தத் தெளிவுகள் அவசியம். தந்தை செல்வா வழியிலேயே நாம் நடக்கின்றோம். டட்லி - செல்வா ஒப்பந்தம், பண்டா - செல்வா ஒப்பந்தம் - அந்த இரு ஒப்பந்தங்களில் எங்குமே சமஷ்டி என்ற சொல் கிடையாது. சொற்களிலும் பெயர் பலகைகளிலும் தொங்கிகொண்டு இருப்பவர்கள் அல்ல நாங்கள். உள் அடக்கம் உண்டா எனப் பார்ப்பவர்கள் நாங்கள்.

ஒரு கட்சி சமஷ்டியைக் கோரும் உரிமை உண்டு என்கின்ற வரலாற்று முக்கியம் வாய்ந்த தீர்ப்பைப் பெற்றவர்களே நாங்கள்தான் - என்றார்.

## நாமே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தேர்தலில் வீட்டுக்கு அனுப்பப்பட்ட நபர்கள் அநுர, தேசிய மக்கள் சக்தி எனப் புராணம் பாடுகின்றார்கள். சாக்கடைக்குள் வீழ்ந்துள்ள தமிழ்க் கட்சிகள் எம் மீது சாக்கடை இருப்பதாகக் கூறுகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட எமது மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தமிழ்க் கட்சிகள் அவதூறு பரப்புகின்றன.

ஜனாதிபதி அநுரவை யாழ்ப்பாணத்தில் கால் வைக்க விடமாட்டோம் என்று மக்களால் நிராகரிக்கப்பட்ட தமிழ்க் கட்சிக்காரர்கள் கூளுரைக்கின்றார்கள். கொழும்பில் கோட்சூட்டுடனும், யாழ்ப்பாணத்தில் வேட்டியுடனும் வலம் வருகின்ற - ரணிலின் கோப்புகளைத் தூக்கி திரிந்த செல்லப் பிள்ளை, அநுரவை யாழ்ப்பாணத்தில் கால் வைக்க விடமாட்டோம் எனக் கூறுகின்றார். முதலில் தனக்கு கால் வைக்க முடியுமா என்பதை யாழ்ப்பாணத்து மக்களால் நிராகரிக்கப்பட்ட அந்நபர் தேடிப் பார்க்க வேண்டும்.

எமது தேசிய மக்கள் கட்சியின் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வேட்பாளர் கபிலன் மீது வழக்குப் போடுவோம் என்று அவர்கள் மிரட்டுகின்றார்கள். வழக்குப் போடுவதைத் தவிர அவர்களுக்கு எதுவும் தெரியாது. உள்ளூராட்சிசபைத் தேர்தல் தோல்விப் பயத்தில் அவர்கள் இப்படி உளறித் திரிகின்றார்கள்.

கபிலன் தனியாள் அல்ல. கபிலனுடன் விளையாடுவது என்பது தேசிய மக்கள் சக்தி அரசுடன் விளையாடுவது போன்றது. இதுவரை இருந்த யாழ். மாநகர மேயர்கள் குறைந்த பட்சம் யாழ்ப்பாணத்துக்கு எதுவும் செய்யவில்லை. நாங்களே ஆளுங்கட்சி என்பதை மறந்துவிடக்கூடாது. 159 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட பெரும்பான்மை ஆளும்தரப்பு. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் எம்மிடம் உள்ளார்.

பேச்சு சுதந்திரத்தை வைத்து ஊடகங்கள், சமூகவலைத்தள எழுத்தாளர்கள், யூடியூப்பர்கள் தமிழைத் தவறாகப் பயன்படுத்துகின்றார்கள். புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் மக்களிடம் ஒப்படைக்கப்படும்"- என்றார்.

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

620.6 மில்லியன் (62 கோடி) இழப்பீடு பெற்றுள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளின் டி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹொரண, கோனபாலவில் நடந்த கட்சிக் கூட்டத்தில் உரையாற்றும் போது அமைச்சர் இதனைக் கூறினார்.

கேகாலை நகர சபைத் தலைவர் ஜி.கே. சமரசிங்க ரூ. 103.5 மில்லியன், பலாங்கொடை நகர சபைத் தலைவர் டபிள்யூ.ஏ.டபிள்யூ.பி. குணரத்ன ரூ. 104.5 மில்லியன், கரந்தெனிய பிரதேச சபைத் தலைவர் ஜி.ஏ.முனகொட ரூ. 109.5 மில்லியன், மினுவாங்கொடை மேயர் எச்.கே.டபிள்யூ.ஜயசேகர ரூ. 122.56 இலட்சம், சீதாவக்க பிரதேச சபைத் தலைவர் ஜயந்த ரோஹன ரூ. 131 இலட்சம், மினுவாங்கொடை பிரதேச சபைத் தலைவர் ஏ.எல்.பத்மகுமார ரூ. 129.2 இலட்சம், ரத்கம பிரதேச சபைத் தலைவர் டி.நிமல் ரூ. 139.9 இலட்சம், கெஸ்பேவ நகரசபை உறுப்பினர் பி.டி.தர்மதாச ரூ. 144.8 இலட்சம், அனுராதபுரம் மாநகர சபை மேயர் எச்.பி.சோமதாச ரூ. 178.7 இலட்சம், கம்பஹ பிரதேச சபைத் தலைவர் கே.கே.அபேரத்ன ரூ. 221.6 இலட்சம், பலாங்கொடை பிரதேச சபைத் தலைவர் சுனில் பிரேமசிறி ரூ. 233.5 இலட்சம், மினுவாங்கொடை பிரதேச சபை உறுப்பினர் டபிள்யூ.எல்.விஜேசேகர ரூ. 267.5 மில்லியன், ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் தலைவர் எம்.ஆர்.குமார ரூ. 352 மில்லியன், கெஸ்பேவ மேயரின் சித்தி லலினி கெலும் ரூ. 392 மில்லியன் ரூபாயும், கோடி காவத்த முல்லேரியாவ பிரதேச சபைத் தலைவர் இந்துனில் ஜகத் குமார ரூ. 450.6 மில்லியனையும், தம்புள்ள நகர சபைத் தலைவர் ஹேமந்த ஜாலிய ரூ. 627.9 மில்லியனையும், கெஸ்பேவ மேயர் லக்ஷ்மன் பெரேரா ரூ. 698.7 மில்லியனையும் பெற்றுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

லக்ஷ்மன் பெரேராவும் அவரது மாமியாரும் ரூ. 1088 மில்லியனைப் பெற்றுள்ளனர். நீங்கள் கருவூலத்திற்கு அனுப்பிய வரிப் பணம் கடந்த காலங்களில் அவர்களின் நண்பர்களிடையே விநியோகிக்கப்பட்டது.

ஆளும்தரப்பிடமிருந்து இழப்பீடு பெற்றதோடு மட்டுமல்லாமல், சிலர் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து காப்பீட்டையும் பெற்றுள்ளனர். இது தொடர்பில் இப்போது தனி விசாரணை நடந்து வருகிறது - என்றார்.

## சபாநாயகர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், நாடாளுமன்றத்தின் துணைச் செயலாளர்நாயகம் மற்றும் உதவிச்செயலாளர் நாயகம் ஆகியோருக்கு 1200 கிலோ மீற்றர் தூரம் வரையிலான மாதாந்திர எரிபொருள் ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இனிமேல், துணைப்பொதுச்செயலாளர் ஒரு அமைச்சகத்தின் மேலதிகச் செயலாளருக்குச் சமமான எரிபொருளைப் பெற உரிமை பெறுவார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓர் அமைச்சகத்தின் மூத்த உதவிச் செயலாளருக்கு ஒதுக்கப்படும் அதேயளவு எரிபொருளை உதவிச் செயலாளர் நாயகத்திற்கும் வழங்க முடிவு செய்யப்பட் டுள்ளது.

அதேபோல், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், துணைச் செயலாளர் நாயகம் மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோர் இனிமேல் ஒரு வாகனத்தை மட்டுமே பெறுவார்கள்.

நாடாளுமன்றத்தில் உள்ள துறைத் தலைவர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடும் குறைக்கப்பட்டது. முன்னாள் நாடாளுமன்றத் தலைவர்கள் கடந்த காலங்களில் வாகனங்கள் மற்றும் எரிபொருளை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர் என்று விசாரணைகளின்போது தெரியவந்ததைத் தொடர்ந்து, வாகனங்கள் மற்றும் எரிபொருளின் அளவைக் கட்டுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் வாகனங்கள் மற்றும் எரிபொருளின் பயன்பாடு தொடர்பான அறிக்கையை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சமீபத்தில் பெற்றார். இதற்கிடையில், சபாநாயகர் இந்த விவகாரத்தை விசாரிக்க பிறப்பித்த அறிவிப்பைத் தொடர்ந்து, தேசிய தணிக்கை அலுவலகமும் நாடாளுமன்றத்தின் செலவுகள் குறித்து விசாரணை நடத்தி வருகிறது.

சமீபத்தில், ஒரு நாடாளுமன்றத் தலைவர் தனது குழந்தையை கிழக்குப் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு அனுப்ப நாடாளுமன்ற வாகனத்தைப் பயன்படுத்தினார் என்று தகவல் வெளியானது. அனுராதபுரத்தில் நடந்த ஒரு நிகழ்வில் கலந்துகொள்ள நாடாளுமன்றத்தால் வழங்கப்பட்ட எரிபொருளை மற்றொரு பெண் அதிகாரி பயன்படுத்தினார் என்பதும் தெரியவந்தது.

சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற பணியாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நிதி பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக ஆகியோரும் பங்கேற்றனர்.

## எலான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைய சேவையின் முன்னேற்றம் குறித்து வெள்ளிக்கிழமை இரவு தொலைக்காட்சி அரசியல் நிகழ்ச்சியின்போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோது ஜனாதிபதி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அருகம்பே பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் சமீபத்திய நீதிமன்ற துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட குற்றங்களைத் தடுப்பதில் தொலைத்தொடர்பு தரவுகளுக்கான அணுகல் முக்கிய பங்கு வகித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். 'எங்களுக்கு தொலைத்தொடர்பு தரவுகளுக்கான அணுகல் இருந்ததால் நாங்கள் விரைவாகச் செயல்பட முடிந்தது,' என்று ஜனாதிபதி கூறினார்.

இதற்கு நேர்மாறாக, ஸ்டார்லிங்க் ஒப்பந்தம் ஆளும்தரப்புக்கு இதேபோன்ற அணுகலை வழங்கவில்லை. 'ஸ்டார்லிங்கின் தரவு அமைப்பை அணுக எங்களுக்கு அதிகாரம் இல்லை, மேலும் இதற்காக உள்ளூர் தொடர்பு நபரும் இல்லை,' என்று அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்பிற்குத் தரவு அணுகல் இன்றியமையாதது என்றும், அது அசல் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். 'பல கூட்டங்களில், அத்தகைய ஒப்பந்தங்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் அபாயங்களை தேசிய பாதுகாப்பு கவுன்சில் எடுத்துரைத்தது' என்று அவர் வெளிப்படுத்தினார்.

'நாங்கள் இதை ஸ்டார்லிங்குடன் விவாதித்தோம், அவர்கள் ஒரு டேஷ்போர்டை வழங்குவதாக உறுதியளித்தனர் - ஆனால் அது எந்த அளவிற்கு தரவு அணுகலை அனுமதிக்கும் என்பது எங்களுக்கு இன்னும் தெரியவில்லை,' என்று அவர் மேலும் கூறினார்.

## தேசியத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர், வெளிநாட்டில் இருப்பவர்கள் என்று பலரும் பாடல்களை இயற்றுகிறார்கள். அது பற்றித் தெரியவில்லை என்றவாறு சமாளிக்க முயன்றார்.

பாடலைவிட்டுவிடலாம், அதில் கூறப்பட்டுள்ளது போன்று தேசியத் தலைவருக்கு சிலை அமைப்பீர்களா என்று கேட்டதற்கு, "இதுவரை பேசியவற்றை சின்ன விடயத்தில் போட்டு மறைத்துவிடாதீர்கள்" என்று பதிலளித்த அமைச்சர் கேள்விக்கு நேரடியாக ஆம், இல்லை என்று கூற மறுத்துவிட்டார். அதற்குப் பதிலாக, முன்னாள் போராளிகளுக்கு, அது புலிகளாகவும் இருக்கலாம் புளொட்டாகவும் இருக்கலாம், ஈபிடிபியாகவும் இருக்கலாம் ஈபிஆர்எல்எவ் ஆகவும் இருக்கலாம், எல்லோருக்கும் ஒரு கனவு இருந்தது. தமிழ மக்கள் நிம்மதியாக தன்மானத்தோடு வாழவேண்டும் என்பதுதான் அந்தக் கனவு. இந்தத் தமிழ்த் தலைவர்களால் இன்றைக்கு அந்தத் தன்மானத்தைக் கட்டியெழுப்ப முடியுமா? போராளிகளின் அர்ப்பணிப்புக்கு அருகில் வரமுடியுமா இந்தத் தமிழ்த் தலைவர்களால்? ஆனால் நாங்கள் அவர்களின் கனவை நனவாக்குகின்ற வேலையை நாங்கள் செய்கின்றோம். ஆகவே அந்த இயக்கங்கள் மீது உண்மையான பற்றுள்ளவர்கள் இருப்பார்களாயின் அவர்கள் ஆரத் தழுவிக் கொள்ளவேண்டிய கட்சி தேசிய மக்கள் சக்தி" என்று கூறி கடைசி வரைக்கும் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் நேரடியாகப் பதிலளிக்கவே இல்லை.

## கட்டாமலேயே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில், 2021 ஆம் ஆண்டில், 466 கிராமப்புற பாலங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன, ஆனால் 84 கிராமப்புற பாலங்களில் மட்டுமே பணிகள் முடிக்கப்பட்டன என்று தேசிய தணிக்கை அலுவலகம் கூறுகிறது.

கண்டி சுரங்கப்பாதை கட்டுமானத் திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான பின்னணி பணிகள் தயாரிக்கப்பட்டிருந்தாலும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மட்டுமே 2023 இல் முடிக்கப்பட்டதாகவும், அதற்காக பேராதனை பல்கலைக்கழகத்திற்கு கிட்டத்தட்ட 80 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டதாகவும் அது கூறுகிறது.

தேசிய தணிக்கை அலுவலகத்தின் 2023 ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைகள் அமைச்சகம் தொடர்பான தகவல் அறிக்கையில் இந்தத் தகவல் உள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# மக்களை ஒடுக்க மக்கள் வாக்குகளை பயன்படுத்தினால் ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழல் வரும்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

ஜனாதிபதி அல்லது ஜே.வி.பி அரசாங்கமோ இனவாதத்தை அழிப்பதாக அவர்கள் கருதினால் அல்லது பயங்கரவாதமாக இதனை கருதினால் அது அவர்களின் தவறு என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இனப்பிரச்சினை இருக்கின்றது.அதனை தீர்க்கும் கடமையும், பொறுப்பும் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது.

இனவாதத்தை ஒழிப்போம் என்று மீண்டும் எங்கள் மீது எமது மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் எங்கள் மீது அடக்குமுறையை திணிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குமாக இருந்தால் இந்த அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் வைத்து வெள்ளிக்கிழமை மாலை ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னார் மாவட்டத்தில் நிர்ணயிக்கக் கூடிய ஒரு சக்தியாக திகழும். மன்னார் நகர சபை உள்ளடங்களாக அனைத்து சபைகளிலும் யாருடன் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைப்பது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுப்போம்.

குறிப்பாக தமிழ் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளுடன் எமது கலந்துரையாடல்கள் இடம் பெறும்.அவர்களுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை அலங்கரிக்கும் நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்.

தேசியத்துடன் இருக்கின்ற தமிழ் கட்சிகள் ஓரணியில் திரளக் கூடிய அஸ்திபாரமாக அமையும். அந்த வகையில் இந்த ஒற்றுமை என்பது மாகாண சபை தேர்தல் வந்தாலும் கூட குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் மக்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினை எதுவாக இருந்தாலும் ஒற்றுமையாக நாங்கள் செயல்படக்கூடிய ஒரு சூழலை மக்கள் ஆதரிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு உள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் ஒற்றுமை வெளிப்படுகின்ற போது தொடர்ச்சியாக நாங்கள்



சேர்ந்து பயணிக்கக்கூடிய சில நேரங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு என பயணிக்கக்கூடிய ஒரு அஸ்திபாரத்தை இடுகின்ற ஒரு சந்தர்ப்பத்தை நாங்கள் இதனால் ஏற்படுத்தி கொள்ள முடியும். மன்னார் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிர்ணயிக்கின்ற ஒரு சக்தியாக இருக்கும்.

என்.பி.பி. நாட்டின் பல பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்கள் இனவாதத்தை ஒழிப்பதாக தெரிவிக்கின்றார்கள்.அதற்காக பாரிய சட்டங்களை கொண்டு வருவதாகவும் கூறுகிறார்கள்.

எங்களுடைய இனம் இந்த நாட்டிலே சுதந்திரமாக தமதுநிலத்தில்வாழக்கூடிய அனைத்துஉரித்துக்களையும் கொண்ட இனமாக தமிழினம் இருக்கின்றது.

குறிப்பாக வடக்கு கிழக்கில் பூர்விகத்தை கொண்ட ஒரு பிரதேசமாக இருந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் எமது இனத்திற்கு ஏற்படுத்துகின்ற அநீதிகளை தட்டிக்கேற்கின்ற வகையில் ஜனநாயக போராட்டங்கள்,ஆயுதப் போராட்டங்கள் இடம் பெற்றன.

அதற்கான தியாகங்களை எமது இளைஞர் யுவதிகள், பொதுமக்கள் எல்லோறும் தியாகம் செய்துள்ள வரலாறு இன்றைக்கும் உள்ளது.இந்த வரலாற்றின் தன்மைதான் ஐ.நா. சபை வரைக்கும் கதவை தட்டி உள்ளது என்பது உண்மை.

எனவே பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டும்.இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்க முடியாது.நாங்கள் இனத்தின் பால் எங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளையும் எங்கள் தேசத்தை கட்டிக் காக்கின்ற வகையில் எமது உரிமைகளை நாங்கள் தக்க வைக்கின்ற வகையிலும்,நாங்கள் ஒரு தனித்துவமான இனம் என்பதை கூறிக் கொள்ளும் வகையிலும் எங்களுடைய போராட்டங்கள் அமைந்துள்ளது.

அந்த வகையில் ஜனாதிபதி அல்லது ஜே.வி.பி அரசாங்கமோ இனவாதத்தை அழிப்பதாக அவர்கள் கருதினால் அல்லது பயங்கரவாதமாக இதனைக் கருதினால் அது அவர்களின் தவறு என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இனப்பிரச்சினை இருக்கிறது.அதனை தீர்க்கும் கடமையும்,பொறுப்பும் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது.

இனவாதத்தை ஒழிப்போம் என்று மீண்டும் எங்கள் மீது எமது மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் எங்கள் மீது அடக்குமுறையை திணிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குமாக இருந்தால் இந்த அரசாங்கத்திற்கு ஓர் எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும்.

எனவே அரசாங்கம் எமது இனப்பிரச்சினை தீர்வுக்கு கவனம் செலுத்த வேண்டும். அதை தட்டிக் கழிக்கும் வகையில் இனப்பிரச்சினையை ஒழிப்போம் என்பதை ஏற்க முடியாது.என அவர் மேலும் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசுக்கு வாக்களிக்குமாறு ஆதரவு தெரிவித்த ஆனந்தங்கரி ஒன்றிணையுமாறும் அழைப்புவிடுப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்குமாறு அழைப்பு விடுத்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை பற்றியும் வலியுறுத்தி உள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

70 வருட அரசியல் அனுபவத்துடன் நான் இருக்கின்றேன். கடந்த காலங்களில் திட்டமிட்டு பிழையான கருத்துக்கள் கூறப்பட்டு அரசியல் மோசடி செய்யப்பட்டது.

பல சந்தர்பங்களில் எம்.பி. ஆவதற்கும், ஏனைய பல வசதி வாய்ப்புக்களுடன் வாழக்கூடிய வகையில் அரசாங்கங்கள் முனைந்தன. ஆனாலும் அதற்கு நான் சாரவில்லை. கை சுத்தமான அரசியலையே செய்தேன்.

இன்று அரசியலில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் வாக்குகள் முக்கிய இடம் பிடித்துள்ளன. ஒவ்வொரு விதமான கட்சிகளாகவும், பிழையாக இணைந்த கட்சிகள் பலவும் என போட்டியிடுகின்றன.

நல்ல கட்சி ஒன்றை மக்களுக்கு காண்பிக்க வேண்டிய கடமை எனக்கு உள்ளது. அந்தக் கடமையை நான் செய்ய வேண்டும்.

எமது கட்சியிலிருது சிலர் பிரிந்து சென்று தனியாக பயணித்தனர். அது தொடர்பில் பேச விரும்பவில்லை. யார் சரி யார் பிழை என்று பேசும் நேரமல்ல.

கடந்த காலங்களில் விட்ட தவறுகளை மூடி மறைக்க நல்ல சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்துள்ளது. மறியலில் இருக்கக் கூடிய பலர் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் உள்ளனர்.

இந்த அரசும் பதவிக்கு வந்தது நியாயமான முறையில் இல்லை. வரும் போது கூறிய அல்லது எதிர்பார்த்த எதையும் அவர்கள் செய்யவில்லை.

2004 இற்குப் பின்னர் வந்த எந்த அரசுகளும் ஜனநாயகமாக உருவாகவில்லை. ஜனநாயகம் அழிந்துவிட்டது. அதனை நாங்கள் இன்று அனுபவிக்கின்றோம். நாடு அழிவுக்குள் செல்கின்றது.

நான் தமிழரசுக் கட்சியை சேர்ந்தவன் அல்லன். தமிழரசுக் கட்சியுடன் வேறு கட்சிகளையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. அதன் உருவக்கத்தில் நானும் இருந்தேன். பல ஆண்டு பகைமைகளை மறந்து தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும் தலைவர்களால் உருவாக்கப்பட்டது.



அந்த கட்சியில் நான் தொடர்ந்தும் செயலாளர் நாயகமாக இருக்கின்றேன். மீண்டும் அவ்வாறான ஓர் அரசியல் நிலைமை உருவாகியுள்ளது. இது காலத்தின் தேவையாகவும் உள்ளது.

எல்லா கட்சிகளையும் மூடி வையுங்கள். நீங்கள் மக்களுக்கு செய்தது போதும். எல்லா வகையிலும் அனுபவித்துவிட்டீர்கள். இனியும் மக்களுக்கு துரோகம் செய்யாதீர்கள்.

நான் குற்றம் ஏதும் செய்ததில்லை. களவு எடுத்ததுமில்லை. எனது கை சுத்தமானது. அவ்வாறு என்னில் குற்றம் ஏதும் கண்டிருந்தால் கோல்பேசில் கொண்டு சென்று அடியுங்கள்.

நான் முடிவெடுத்துவிட்டேன். எமது கட்சிக்கு ஆபத்து இருப்பதாக நான் உணர்கிறேன். அவ்வாறான நிலையிலிருந்து நான் இந்த அழைப்பை விடுகின்றேன்.

தமிரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் எம்முடன் இணையுங்கள். அவ்வாறு இணைய வேண்டிய காலம் இதுவாகும். தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வா உருவாக்கிய கட்சியே தமிழர் விடுதலைக் கூட்டணி.

எல்லாரும் இணைந்து ஒன்றாக பயணித்த எமது கட்சி பல தியாகங்களை செய்தது. அந்த கட்சியிலிலிருந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவதே பொருத்தமானது. தமிழரசில் இருந்து பிரிந்தவர்கள் பெரும் தலைவருக்காக எம்முடன் இணையுங்கள்.

மற்றவர்கள் அனுபவித்தது போதும். ஒதுங்குங்கள். மக்களை வருத்தி அநியாயம் செய்தும், மக்களை துன்புறுத்தியும் உள்ளனர்.

இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் போட்டியிடவில்லை. மீண்டும் ஒன்றாக சேர்ப்பதற்காகவே இவ்வாறு நாம் தனித்து போட்டியிட விரும்பவில்லை.

இன்று தமிரசுக் கட்சி பிரிந்து 5 ஆறு பிரிவுகளாக உள்ளது. எமது இந்தக் கட்சியையும் உடைக்க முளைத்தனர். ஆனால் அது முடியவில்லை. நாங்கள் ஒருமித்து பயணிக்க வேண்டும். அதற்கான சூழல் உள்ளது.

எனவே, இந்த தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும். இந்த தேர்தலின் பின்னர் அனைத்தையும் களைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைய வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்புக் களை பகிர்ந்து ஏற்க அனைவரும் ஒற்றுமை யாக ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

113.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# “தமிழ்க் கட்சிகளுக்கே உங்கள் வாக்கை இடுங்கள்” தமிழ்த் தேசிய செயற்பாட்டுக் குழுமம் வலியுறுத்து

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொள்கைப் பற்றுள்ள தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு கோரி வவுனியா நகரில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தமிழ்த்தேசியசெயற்பாட்டுக்குழுமத்தால்குறித்த விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள் -

வரலாறு எமக்கு வழிகாட்டி. வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு வழிகாட்ட தென்பகுதி சிங்களத் தலைமைகள் தேவையில்லை. வலிசுமந்து, உடைமையிழந்து, உறவையிழந்து அனைத்துலக நீதிக்காய்அல்லும்பகலும்உழைக்கும்இவ்வேளையிலே பகட்டுக்காகவும், பம்மாத்து வார்த்தைகளுக்காகவும், பற்றுள்ள தமிழினம் சோரம் போகலாமா?

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இது உரிமைக்கான குரலை மழுங்கடிக்க கொழும்பு சிங்களக் கட்சிகளுக்கும், அவர்களோடு சோரம் போகும் எட்டப்பர் கட்சிகளும் எம்மண்ணில் ஏப்பம்



விடுகின்றனர்.

ஏமாந்து யாராவது அப்படியான இறக்குமதி கட்சிகளுக்கு வாக்களித்து எமது வரலாற்றை மாற்றவேண்டாம். தமிழ் தேசிய கட்சிகளுக்கு மட்டும்தமிழர்களாக வாக்களிப்போம். தனி நபர்கள்,



வேண்டாதவர்கள் தமிழ் தேசிய கட்சிகளில் இருந்தால் அவர்களை ஒதுக்கி விட்டு கொள்கைப்பற்றாளர்கள் உள்ள தமிழ் தேசிய கட்சிகளுக்கு வாக்களிப்போம் என்று தெரிவித்தனர். 100

# மருத்துவத் துறையில் மாவட்ட முதலிடம் பெற்ற கல்முனை மாணவிக்குப் பாராட்டு

(நூருல் ஹுதா உமர்)

பரீட்சை திணைக்களத்தினால் அண்மையில் வெளியீடு செய்யப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சை (2024) பெறுபேறுகளின் படி கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி முஹம்மது நௌபர் பாத்திமா ஸப்றீன் உயர்தர உயிரியல் பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் முதல் நிலையை பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட முஹம்மது நௌபர்பாத்திமாஸப்றீன்அகிலஇலங்கை ரீதியில் 24ஆம் நிலையினையும் வெட்டுப்புள்ளி - 2.7617 யையும் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களிலும் அதி சிறப்பு ’ஏ’ சித்தியினை பெற்றுள்ளதுடன் எஸ்.டி.எம். நௌபர், ஏ.எல்.எம். ரஹீமா ஆகியோரின் அன்பு புதல்வியும் ஆவார்.

மாவட்டத்தில் முதல் நிலை பெற்ற மாணவியின் திறமையை பாராட்டி வாழ்த்து தெரிவிக்கும் முதற்கட்ட நிகழ்வு கல்லூரி முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அன்றைய தினம் உயர்தர பிரிவில் சிறந்த சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பம், வர்த்தகம், கலை பிரிவு மாணவிகளும் பிரசன்னமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




க.பொ.த உயர்தர உயிரியல் பிரிவில்அம்பாறைமாவட்டத்தில் முதல் நிலையை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்த பாத்திமா ஸப்றீன் அவரின் பெற்றோர்களுக்கும் கல்லூரி முதல்வர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள், கல்லூரியின் ஆசிரியர்கள், மேலதிக கருத்தரங்குகள் கற்பித்த ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவரும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

# அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்புக்கு வரையறை விதிப்பது பத்திரிகை சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடு

## தொழில்முறை இணைய ஊடக அமைப்பு அறிக்கை

அரசதகவல்திணைக்களத்தால்ஏற்பாடுசெய்யப்பட்டுகின்ற அமைச்சரவைதீர்மானங்களை அறிவிப்பதற்காகநடைபெறும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்வதற்கு அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையை வைத்திருப்பதை கட்டாயமாக்குவது குறித்து கவனம் செலுத்தியுள்ள

தொழில்முறை இணைய ஊடக அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அமைப்பின் தலைவர் பிரடி கமகே செயலாளர் கெமும் சிறிவன்த ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

இந்தத் தீர்மானம் பத்திரிகை சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாகவும், மக்களின் தகவல் அறியும் உரிமையில் தலையிடுவதாகவும், நாட்டின் ஜனநாயக விழுமியங்களுக்கு தீங்கு விளைவிப்பதாக இருக்கும் என்று எங்கள் அமைப்பு கருதுகிறது.

செய்தி அறிக்கையிடல் மற்றும் தகவல் பரப்புதலில் ஊடகவியலாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஊடகவியலாளர்களும் தகவல்களைப் பெற்று அவற்றை பொதுமக்களுக்கு பிழையின்றி விநியோகிப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளனர். எனவே, அரசாங்க தகவல் திணைக்களத்தின்இந்தமுடிவுஎமதுதொழில்சார்சகோதரர்களின் பணிகளுக்கு ஒரு தடையாகவும் பத்திரிகை சுதந்திரத்திற்கு பாரிய அச்சுறுத்தலாகவும் உள்ளது.

எனவே, இந்த முடிவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் திரும்பப் பெறுமாறு அரசாங்கத்தையும் அரசாங்க தகவல்திணைக்களத்தையும்கடுமையாகவலியுறுத்துகிறோம்.

மேலும், அமைச்சரவை தீர்மானங்களை எவ்வித தடங்கலும் இன்றி அறிவிப்பதற்காக அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

நாட்டில்ஊடககலாசாரமொன்றைகட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து ஊடகவியலாளர்களும் ஒழுக்கத்தை நிலைநிறுத்தும் வகையில் தமது ஊடகங்களுக்கு எப்போதும் பொறுப்புடன் செயற்படுமாறு நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

சுயாதீன ஊடக அறிக்கையிடல் மற்றும் மக்களின் தகவல் அறியும் உரிமைக்காக தொழில்முறை இணைய ஊடக அமைப்பு தொடர்ந்தும் குரல் கொடுக்கும். – என்றுள்ளது.

# அரசியலில் களமிறங்கும்போது பெண்கள் கடும் எதிர்ப்புக்களைச் சம்பாதிக்கிறார்கள்

## இருதயராணி தெரிவிப்பு

(சுபேசன்)

பெண்ணாணவள் சமூகத்தின் பால் அக்கறை கொண்டு அரசியலில் களமிறங்கும் போது அவள் எதிர்ப்புக்களைச் சம்பாதிக்கின்றாள் என யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகள் சம்மேளன உறுப்பினர் இருதயராணி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; –

பெண்ணின் அரசியல் வீட்டினை திறம்பட நிர்வகிப்பதில் இருந்து ஆரம்பிக்கின்றது. ஆனால் வீட்டில் திறம்பட அரசியல் செய்யும் பெண் சமூகத்தின் பால் அக்கறை கொண்டு வீதிக்கு இறங்கி அரசியல் செய்யும் போது எதிர்ப்பைச் சம்பாதிக்கின்றாள்.

பெண் பிறப்பில் இருந்தே அடிமை வாழ்வை ஆரம்பிக்கின்றாள்.

அடிமைத் தனத்தில் இருந்து வெளிவரும் பெண்களால் தான் நிச்சயமாக சாதிக்க முடியும். தனது தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள முடியும்.

பெண்களுக்குத் தேவைப்பாடான விடயங்கள் பெரும் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயேசெயற்படுத்தப்படுகின்றன.

உள்ளூஜூராட்சி மன்றங்களில் கூட போராடியே பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டியுள்ளது.

சபைகளில்பெண்களால்முன்வைக்கப்படும்கோரிக்கைகளை சக உறுப்பினர்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளாத நிலை காணப்படுகின்றது.பலவிமர்சனங்களையும்சந்திக்கவேண்டியுள்ளது.

பெண்கள்அரசியலில்தவிர்க்கமுடியாதசக்திகளாகஉருவெடுக்க வேண்டும்.அதனூடாகவே பெண்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து கொள்ள முடியும். – என்றார்.

# யாழில் முதலில் தன்னால் கால் வைக்கமுடியுமா என்பதை யாழ்.மக்கள் நிராகரித்த அந்தநபர் தேடிபார்க்கவேண்டும்

## சந்திரசேகரன் தெரிவிப்பு

கொழும்பில்கோட்சூட்டுடனும்,யாழ்ப்பாணத்தில் வேட்டியுடனும் வலம் வருகின்ற - ரணிலின் கோப்புகளைத் தூக்கி திரிந்த செல்லப் பிள்ளை, அநுரவை யாழ்ப்பாணத்தில் கால் வைக்க விடமாட்டோம் எனக் கூறுகின்றது. முதலில் தனக்கு கால் வைக்க முடியுமா என்பதை யாழ்ப்பாணத்து மக்களால் நிராகரிக்கப்பட்ட அந்நபர் தேடி பார்க்க வேண்டும் - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், யாழ்.மாநகர சபை மேயர் வேட்பாளர் சு.கபிலன் ஆகியோரும் உடனிருந்தனர்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

நான் அமைச்சராக இருந்தாலும் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் மக்கள் மத்தியில் செல்கின்றேன். ஆனால் அவர் எஸ்.டி.எப். பாதுகாப்புடன் வலம் வருகின்றார். இது வெட்கம். இவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதி. அநுரவை கால் வைக்க இடமளிக்கமாட்டாராம்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாநகர சபை முதல்வர் வேட்பாளர் கபிலனுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படுமாம். வழக்கு தொடுப்பதைதவிர அவருக்கு வேறு என்ன தெரியும்?

கபிலன் சுந்தரமூர்த்தி எமது கட்சியின் முதன்மை வேட்பாளர். அவர் தனி நபர் அல்ல. அவருக்கு பின்னால் எமது கட்சி, அரசாங்கம் உள்ளது. கபிலனுடன் விளையாட முற்படுவது எம்முடன் விளையாட முற்படுவதாகும். சாக்கடை அரசியலின் வெளிப்பாடாகவே அவரை இலக்கு வைத்து தாக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்து மக்களால் விரட்டியடிக் கப்பட்டவர்கள் தமக்கான அரசியல் இருப்பை தேடுகின்றனர். அதனால்தான் போராட்டத்துக்கான அறைகூவல் விடுக்கின்றது. ஆனால் உண்மை என்னவென்பது மக்களுக்கு தெரியும்.

அதேவேளை, இந்நாட்டின் முன்னாள் போராளிகள் கனவு கண்டிருப்பார்கள். அது புலிகளாக இருக்கலாம், ஈபிடிபியாக இருக்கலாம், ஈபிஆர்எல்எப் ஆக இருக்கலாம். தமிழ் மக்கள் நிம்மதியாக, தன்மானத்துடன் வாழ வேண்டும் என்பது அவர்களின் கனவு. அந்த கனவை தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளால் நிறைவேற்ற முடியுமா? போராளிகளின் அர்ப்பணிப்புக்கு அவர்களால் அருகில்கூட வரமுடியாது.

அவர்கள் கனவு கண்டிருந்தாலும்கூட அந்தக் கனவை நனவாக்குவதற்குரிய வேலையை நாம் செய்கின்றோம். இயக்கங்கள் மீது உண்மையான




பற்றுள்ளவர்கள் தேசிய மக்கள் சக்தியையே ஆரத்தழுவிக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தை, உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. உண்மையான உரிமையாளர்கள் இல்லாதபோதுதான் அடுத்தக்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். - என்றார்.

# லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் தொடருந்து அதிகாரி கைது

லஞ்சம் பெற்றதாக கூறப்படும் ரயில் பயணச்சீட்டு பரிசோதகர் ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பகுதியைச் சேர்ந்த பயணி ஒருவரால் இலஞ்சம் மற்றும் ஊழல்விசாரணைஆணைக்குழுவுக்குஅளிக்கப்பட்டமுறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

கடந்த 28 ஆம் திகதி சந்தேக நபரான ரயில் பயணச்சீட்டு பரிசோதகர் கொம்பனி வீதி ரயில் நிலையத்தில் செல்லுபடியாகும் ரயில் பயணச்சீட்டு இல்லாத பயணி ஒருவரிடமிருந்து தேசிய அடையாள அட்டையை கைப்பற்றியுள்ளார்.

பின்னர் சந்தேக நபர் அந்த தேசிய அடையாள அட்டையை மீண்டும் பயணியிடம் வழங்குவதற்கு 3,000 ரூபா பணத்தை இலஞ்சமாக கோரியுள்ளார்.

இலஞ்சமாக கோரப்பட்ட பணம் அதிகம் என்பதால் அதனை 1,500 ரூபாவாக குறைக்குமாறு குறித்த பயணி சந்தேக நபரிடம் கூறியுள்ளார்.

பின்னர் சந்தேக நபர் அந்த பணத்தை பெற்றுக்கொள்ளும் போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சுற்றுலா பற்றுச்சீட்டு பரிசோதகர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.05.2025இல் வெளியிடப்பெற்றது